704

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.

கோயமுத்தூர் ஜில்லா பூகோளம்

704
3 AUG 1940
MADRAS
3870

V. S. Venkataraman & Co., Kur

NEW METHOD GEOGRAPHY

OF THE

COIMBATORE DISTRICT

BY

S. VIRASAMY PATHAR, M.A., L.T.,

REVISED BY

S. SWAMINATHAN, B.A., L.T.,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 AUG 1940
MADRAS

915.482 [1]

3310

8870

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS, FOR CLASS USE

(Vide P. 76 of the Fort St. George Gazette Part 1-B dated 30—4—'40.)

V. S. VENKATARAMAN & CO.

PUBLISHERS : : : : KUMBAKONAM

Copyright]

[Price As. 5

Re-printed—1940

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD :: :: MADRAS.

PREFACE

This New Method Geography of the Coimbatore District originally written by Sri S. Virasamy Pathar, has been revised in accordance with the departmental syllabus recently issued. The method adopted is largely descriptive, while an attempt has been made to introduce regional study. Legend and History are closely linked with geographical facts, to make the study interesting to young children. Emphasis has been laid on man's relation to his environment. Abstract ideas have been carefully eschewed. Only such things that will create a Geographical sense in young children have been introduced. Numerous maps, illustrations and sketches are given, to make the study realistic and interesting. The style is simple and lucid and presents no difficulty for the Elementary School children.

5—11—1939 S. SWAMINATHAN

பொருளடக்கம்

அத்தியாயம்	விஷயம்	பக்கம்
1.	பொது விவரம்	1
2.	எட்டுத் திசைகள் : படங்களில் திசை கண்டுபிடித்தல்	1
3.	பிளான் வரைதல்	2
4.	கால நிலை : பருவ காலங்கள்	3
5.	காற்று	5
6.	மழையும், அதன் வேலையும்	7
7.	கடல் : கடற் பிரயாணம்	9
8.	கிராமமும், பட்டணமும்—பட்டணம் ஏற்படும் விதம்	10
9.	நாட்டு வாழ்க்கையும், நகர வாழ்க்கையும்	12
10.	பயிர்கள்	12
11.	போக்கு வரவு	14
12.	சந்தை	15
13.	தொழிற்சாலைகள்	17
14.	கோயமுத்தூர் ஜில்லாவின் எல்லையும், இயற்கை அமைப்பும்	18
15.	மலைகளும், நதிகளும்	19
16.	சீதோஷ்ண நிலைமை	21
17.	விவசாயமும் விளைபொருள்களும்	24
18.	கைத்தொழிலும் வியாபாரமும்	30
19.	போக்கு வரவு சாதனங்கள்	31
20.	ஜனங்கள், மதம், பாஷை	34
21.	அரசாங்கப் பிரிவுகள்	39
22.	தாலூக்காக்களும், முக்கிய பட்டணங்களும்	39
23.	சீதோஷ்ண ஸ்திதி : விளைபொருள் : மனித வாழ்க்கை	49

ஸ்கேல்: 1 அங். - 16 மைல்.



கோயமுத்தூர் ஜில்லா
இயற்கை அமைப்பு
காவேரி நதி
கொள்ளேகாலம்
பவானி
பவானி நதி
கோபிசெட்டிபாளையம்
சத்தியமங்கலம்
ஈரோடு
காவேரி நதி
அவிநாசி
மேட்டுப்பாளையம்
நொய்யல் நதி
திருப்பூர்
பல்லடம்
கோயமுத்தூர்
வெள்ளிமலை
தாராபுரம்
அமராவதி நதி
பாலக்காட்டுக் கணவாய்
பொள்ளாச்சி
உடுமலைப்பேட்டை
கொழுமம்
ஆனைமலை
திருவாங்கூர்
மதுரை
திருச்சி
சேலம்
நீலகிரி
மலையாளம்
மைசூர்
மலைப்பிரதேசம்

ஜில்லா பூகோளம்

1. பொது விவரம்

பல குடும்பங்கள் சேர்ந்து வசிக்கும் இடம் கிராமம் எனப்படும். பல கிராமங்கள் சேர்ந்தது தாலூக்கா. பல தாலூக்காக்கள் சேர்ந்து ஜில்லா ஆகிறது. பிள்ளைகளே, நாம் எந்த ஜில்லாவில் வசிக்கிறோம்?

பல ஜில்லாக்கள் அடங்கியது மாகாணம் அல்லது ராஜதானி ஆகும். நமது ஜில்லா சென்னை ராஜதானியில் உள்ளது. பல மாகாணங்கள் சேர்ந்து நமது இந்தியா தேசம் ஆகிறது.

இந்தியா தேசம் நாம் வாழும் பூமியின் ஒரு சிறிய பாகமே. பூமி மிகவும் பெரியது. அதில் பல தேசங்களும் கடல்களும் அடங்கியுள்ளன. பூமி பார்வைக்குத் தட்டையாகத் தோன்றினாலும் அது உண்மையில்



உருண்டை வடிவமானது. பூமியின் உருண்டையைப் பூ-கோளம் (கோளம் = உருண்டை) என்பார்கள்.

நாம் வாழும் பூமியைப்பற்றி விவரிப்பது பூகோள நூல் ஆகும்.

2. எட்டுத் திசைகள் : படங்களில் திசை கண்டுபிடித்தல்.

பிள்ளைகளே! படத்தில் காட்டிய படி காலையில் சூரியனைப் பார்த்துக் கொண்டு நின்றால் முன்புறம் கிழக்கு,



முதுகுப்புறம் மேற்கு, வலது கைப்புறம் தெற்கு, இடது கைப்புறம் வடக்கு ஆகும். இந்த நான்கு திசைகளைத் தவிர வேறு நான்கு திசைகளையும் நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும். வடக்குக்கும் கிழக்குக்கும் நடுவிலுள்ளது வட கிழக்கு. இதே மாதிரி தென் கிழக்கு, தென் மேற்கு, வட மேற்கு ஆகிய திசைகளையும் காட்டுங்கள்.

பூகோள பாடங்களில் நாம் அடிக்கடி படங்களை உபயோகிக்கிறோம். ஆதலால் படத்தில் திசைகளைக் காட்ட



நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சாதாரணமாக தேசப் படங்களில் திசைகளைப் படத்தில் காட்டிய படி குறிப்பதுண்டு. வடக்குப் புறத்தை மேலாக வைத்துப் படங்களைத் தொங்கவிடுவது வழக்கம். ஆகையால்

நீங்கள் படத்தைப் பார்த்து நிற்கும்போது தலைப்புறம் வடக்கு, அடிப்புறம் தெற்கு, வலது கைப்புறம் கிழக்கு, இடது கைப்புறம் மேற்கு என்று ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

கேள்விகள்

1. உன் ஊரின் பெயரென்ன? அது எந்தத் தாலூக்காவைச் சேர்ந்தது?

2. காலையில் சூரியனைப் பார்த்து நின்றால் உங்கள் இடது கைப்புறம் எந்தத் திசை? வலது கைப்புறம் எந்தத் திசை?

3. படத்தில் எந்தெந்தப் பக்கம் எந்தெந்த திசையைக் குறிக்கும்?

4. தென்மேற்குத் திசை எந்த இரண்டு திசைகளுக்கு இடையிலுள்ளது?

5. எட்டுத் திசைகளையும் கற்பலகையில் ஓர் படம் வரைந்து காட்டு.

6. உன் ஊருக்குக் கிழக்கில் எந்த ஊர் இருக்கிறது? தென்மேற்கில் எந்த ஊர் இருக்கிறது?

3. பிளான் வரைதல்

பூகோள பாடத்தில் கிராமப் படம், ஜில்லாப் படம், தேசப் படம், உலகப் படம் ஆகியவற்றை உபயோகிக்கிறோம். கிராமம், ஜில்லா முதலியன காகிதம், கற்பலகை இவற்றைவிட எத்தனையோ மடங்கு பெரியவை. அவ்வளவு பெரிய இடங்களை ஒரு சிறியகாகிதத்தில்எவ்விதம் வரைந்து காட்டலாம் என்பதைத தெரிந்து கொள்வோம்.

உங்கள் புத்தகத்தைக் காகிதத்தின் மேல் வைத்து, அதைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் பென்ஸிலால் கோடு கிழித்துவிட்டு, புத்தகத்தை எடுத்து விடுங்கள்.

காகிதத்தில் ஏற்பட்ட உருவம் புத்தகத்தின் சித்திரம் அல்லது படம் ஆகுமா? ஆகாது. காகிதத்தில் ஏற்பட்ட உருவம் புத்தகத்தின் பரப்பைக் காட்டுகிறது. இவ்விதம் பரப்



5 அங்குலம்

7 அங்குலம்

பைக் காட்டும் உருவத்துக்கு தரைப் படம் அல்லது பிளான் என்று பெயர்.

நீங்கள் சிறிய பொருள்களின் தரைப்படம் வெகு சுலபமாய் வரைந்து விடலாம். ஆனால் பெரிய இடங்களின் தரைப்படம் எப்படி வரைவது? பெரிய மிருகங்களான யானை, குதிரை முதலியன சிறிய சித்திரமாக எழுதப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அவை அளவில் சிறியதாய் இருந்தபோதிலும் உருவத்தில் மாறவில்லை. அதேபோல் நாமும் பெரிய இடங்களின் அளவைக் குறுக்கி, உருவத்தை மாற்றாமல் தரை படம் வரையலாம்.

20 அடி நீளமும் 15 அடி அகலமுமுள்ள ஒரு தரைப்படம் வரையவேண்டும் என்று வைத்துக்கொள்வோம். நமது காகிதத்தில் அதே அளவில் தரைப் படம் வரைய முடியுமா? 10 அடி அளவைப் படத்தில் ஒரு அங்குலத்தால் காட்டுவதாய் வைத்துக் கொண்டால் நமது பிளானின் நீளம் 2 அங்குலம், அகலம் $1\frac{1}{2}$ அங்குலம் ஆகும். பிளான் 1 அங்குலம் 10 அடியைக் குறிக்கிறது என்று மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்? 1 அங்குலம் 10 அடி என்று படத்தின தலைப்பில் வலது புறத்தில் எழுதிவிடுவது வழக்கம். இதற்கு அளவுக் குறிப்பு அல்லது ஸ்கேல் என்று பெயர்.

ஸ்கேல் :—1 அங். = 30 அடி.



பள்ளிக்கூடத்தின் தரைப்படம்

இதேவிதம் பாடசாலையின் தரைப்படம் ஒன்று வரையப்பட்டிருக்கிறது. அதன் நீளம் அகலத்தையும், அறையின் நீள அகலத்தையும் கண்டுபிடி. பாடசாலையின் பிளான் போலவே, கிராமப் படம், ஜில்லாப் படம், தேசப்படம் இவற்றை எழுதுவார்கள்.

தேசப் படங்களில் மேடு பள்ளங்களை எவ்விதம் தெரிந்து கொள்ளுவது என்று உங்களுக்குத் தெரியுமா? சாதாரணமாக வர்ணங்களிலிருந்து மேடு பள்ளங்களைத் தெரிந்து கொள்ளலாம். அதன் விவரம் பின் வருமாறு :

சமவெளி—பச்சைவர்ணம். சிறிது மேட்டுப் பாங்கான நிலம்—மஞ்சள் வர்ணம். மலைகள்—பழுப்பு வர்ணம். கடல்— நீல வர்ணம்.

கேள்விகள்

1. பள்ளிக்கூடத்தின் 'பிளான்' என்றால் என்ன ? அதை எவ்விதம் வரைவது ?

2. 'அளவுக் குறிப்பு' என்றால் என்ன ?

3. உன் பாடசாலையின் நீளம், அகலம் எவ்வளவு ?

4. தகுந்த ஒரு அளவுக் குறிப்பு எடுத்துக்கொண்டு உன் பள்ளிக்கூடத்தின் படம் வரைந்து காட்டு.

5. தேசப் படத்தில் பச்சை வர்ணம் எதைக் காட்டுகின்றது?

6. சமுத்திரத்தைக் காட்ட என்ன வர்ணம் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

4. கால நிலை : பருவ காலங்கள்

சூரியன் காலையில் தோன்றி மாலையில் மறைகிறது. சூரியன் தான் நமக்கு வெளிச்சமும் உஷ்ணமும் கொடுக்கின்றது. சூரியனில்லாவிடில் ஓர் உயிரும் ஜீவித்திருக்க முடியாது. மழை பெய்யாது ; புல் பூண்டுகளும் முளையா.

காலையில் சூரியன் எங்குத்தோன்றுகிறது? கிழக்கு அடிவானத்தில் அல்லவா? பிறகு அது கொஞ்சங் கொஞ்ச

மாக உயரே கிளம்பி நடு மத்தியானத்தில் வானத்தின் உச்சியில் வருகிறது. பிறகு கொஞ்சங் கொஞ்சமாகச் சாய்ந்து மாலையில் மேற்கு அடிவானத்தில் மறைகிறது. சூரியன் அஸ்தமித்தவுடன் வெளிச்சமும், உஷ்ணமும் இல்லாமல் போகின்றன.

காலையில் சூரிய கிரணங்கள் மிகவும் சாயவாக விழுகின்றன. ஆகையால் அப்போது சூரிய உஷ்ணம் குறைவாக இருக்கிறது. பிறகு சூரியன் வானத்தில் மேலே ஏற ஏறச் சூரிய கிரணங்கள் சாய்வில் குறைந்து, நடு மத்தியானத்தில் சூரியன் தலைக்கு நேராக வரும்போது கிரணங்கள் நேர் செங்குத்தாக விழுகின்றன. அப்பொழுது சூரிய உஷ்ணம் மிகவும் ஜாஸ்தியாகவிருக்கிறது. நடு மத்தியானத்திற்குப் பிறகு சூரியன் கொஞ்சங் கொஞ்சமாகச் சாய்ந்து உஷ்ணமும் குறைகிறது. கடைசியில் மறையும்போது உஷ்ணமே இல்லாமல் போகிறது.

இவ்விதம் அவ்வப்போது ஏற்படும் நிலைமையைப்பற்றிப் பேசுவது கால நிலை எனப்படும்.

ஒரு நாளில் கால நிலை வேறுபடுவது போலவே, ஒரு வருஷத்திலும் அது மாறுதல் அடையும். சில மாதங்களில் சூரிய கிரணங்கள் செங்குத்தாய் விழும். அம்மாதங்களில் சூரிய உஷ்ணம் அதிகமாக இருக்கும். இப்பொழுது காலை 10-மணிக்குள்ளாகவே பூமி சூடேறி நாம் நடக்கும் போது நமது கால்களைச் சுட்டுவிடும். நடுமத்தியானத்தில் வெளியில் கிளம்ப முடியாதபடி உஷ்ணமாகவிருக்கும்; மிகவும் புழுக்கமாகவும் இருக்கும். அப்போது விசிறிக் கொள்கிறோம். காற்று அடித்தாலும் அக்காற்றும் உஷ்ணமாகவே இருக்கும். ஆறு, குளம், ஏரி, கிணறு இவைகளில் தண்ணீர் குறைந்து வறண்டு போகும். பயிர் பச்சைகள் வளரா. புல் பூண்டுகளும் காய்ந்து போம். ஈர வேஷ்டிகள் சீக்கிரம் உலரும். அடிக்கடி தாகம் எடுக்கும் குளிர்ந்த தண்ணீரில் குளிக்கவும், குளிர்ந்த நீரைக் குடிக்கவும் ஆவல் உண்டாகும்.

உஷ்ணம் அதிகமான மாதங்கள் கோடைமாதங்கள் அல்லது கோடைக்காலம் எனப்படும். சூரிய உஷ்ணத்தின் ஏற்றத் தாழ்வை உஷ்ணமானியால் அறிந்து கொள்ளலாம்.

வானத்தைப் பார்! வானம் என்ன நிறம்? நீல நிறம் அல்லவா? வானத்தில் சிறு சிறு வெள்ளைக் கூட்டங்கள் காணப்படும். அவைகள் மேகங்கள். மேகங்கள் சில சமயங்களில் சூரியனை மறைத்துவிடும். அப்போது சூரிய உஷ்ணம் சற்றுக் குறைவாக இருக்கும். அச்சமயம் வழி நடைப் பிரயாணத்தின் சிரமம் தெரியாது. மப்புப் போட்டிருக்கும் நாட்களில் சூரிய உஷ்ணம் பொதுவாகக் குறைவாகவே இருக்கும்.

சில சமயங்களில் நீங்கள் வானம் கறுத்து இருண்டுஇருப்பதைப்பார்த்திருப்பீர்கள். அப்போது சூரிய உஷ்ணம் இருக்காது; காற்று ஜில்லென்று வீசும். உடனே 'தட தட' வென்று மழை பெய்யும். மழை பெய்யும்போது புழுக்கமாக இருக்காது. கோடை நாளில்மழைபெய்தால் அது ரொம்ப ஆனந்தமாகஇருக்கும். சிறுவர்களும் சிறுமிகளும தெருவில் கப்பல் செய்து மிதக்க விட்டும், அணைக் கட்டுகள் கட்டியும் உற்சாகமாக விளையாடுவார்கள். மழை அதிகமாகப் பெய்தால் குளிர் எடுக்கும். அப்போது

நாம் சட்டை முதலானவைகள் போட்டுக்கொண்டு குளிரைத் தடுத்துக் கொள்ளுகிறோம்.

இம்மாதிரியே சில மாதங்களில் வானங் கறுத்து மின்னல் மின்னி, இடி இடித்து அடிக்கடி மழை பெய்யும். சில சமயங்களில் ஐந்து ஆறு நாட்கள் சேர்ந்தாற்போல் விடாமல் மழை பெய்யும். அப்போது நமக்கு மிகவும் கஷ்டமாகவிருக்கும். வெளியில் கிளம்ப முடியாது. ஆறு, குளம், வயல், ஏரி, கிணறு இவைகளில் தண்ணீர் நிரம்பி சில சமயங்களில் உடைப்பு எடுத்துவிடும். வீடுகளெல்லாம் நச நசவென்று ஈரமாகவிருக்கும். தாகம் எடுக்காது. குடிக்கவும், குளிக்கவும் சுடு தண்ணீர் வேண்டியிருக்கும். பசியும் மந்தமாகவிருக்கும். வேஷ்டி துணிகள் சீக்கிரம் உலரா. ஆடு மாடுகளும் கொட்டிலில் கட்டிக்கிடக்கும். ஜனங்களும் அதிகமாக வெளியில் கிளம்ப மாட்டார்கள். மாலையில் சீக்கிரம் இருட்டிவிடும். மழை அதிகமுள்ள மாதங்கள் மழைக்காலம் எனப்படும்.

சில மாதங்களில் இரவில் பனி பெய்யும். குளிர் அதிகமாகவிருக்கும். அப்போது போர்வைகள் போர்த்திக் கொள்ளவேண்டும். காலையில் எழுந்திருந்தால் பனியினால் மரம் செடிகள் மறைக்கப் பட்டிருக்கும். இக்காலத்தில் வாயைத் திறந்தால வாயிலிருந்து புகை வருவது தெரியும். இந்த மாதங்கள் பனிக்காலம் எனப்படும்.

உஷ்ணம், மழை, குளிர் இவைகளுக் கேற்ப வருஷத்தின் மாதங்களைச் சில பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளுக்குப் பருவ காலங்கள் எனப் பெயர். அவைகள் பின் வருமாறு:

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, கோடைக்காலம். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை—மழைக் காலம். மார்கழி, தை, மாசி, பங்குனி —பனிக்காலம்.

கேள்விகள்

1. ஒரு தினத்தில் சூரிய உஷ்ணம் எப்போது அதிகம்? ஏன்?

2. பருவ காலங்கள் எத்தனை? அவை என்னென்ன?

3. கோடைக் காலம், மழைக் காலம் இவைகளைப் பற்றி உனக்குத் தெரிந்த சிலமுக்கியமான விஷயங்களைச் சொல்லு.

4. உஷ்ணத்தை எப்படி அளப்பார்கள்? கேட்டறிக.

5. காற்று

நம்மைச் சுற்றி வாயு வியாபித்திருக்கின்றது. சகல பிராணிகளும் உயிர் வாழ வாயு மிகவும் அவசியமானது. ஆகாரமும் தண்ணீருமில்லாமல் சில நாட்கள் இருக்கலாம். ஆனால் வாயு இல்லாவிடில் கொஞ்ச நேரங்கூட இருக்க முடியாது. வாயு இல்லாவிடில் நாம் மூச்சுத் திணறிப் போவோம். வாயுவை நாம் கண்ணால் பார்க்க முடியாது; அது அசைவதை மட்டும் உணரலாம். ஒரு விசிறியை எடுத்து விசிறிப் பார். அப்போது வாயு அசைவதை உணரலாம்.

வாயு எப்போதும் ஓரிடத்திலிருக்காது அது அங்குமிங்கும் அசைந்து



கொண்டேயிருக்கும். அசையும் வாயுவுக்குக் காற்று என்று பெயர். காற்று

அடிக்கும் திசையை மரத்தின் இலைகள் அசைவதாலும், குளத்தில் அலைகள் உண்டாவதாலும், மேகங்கள் ஓடுவதாலும், தூசிகள் பறப்பதாலும் தெரிந்து கொள்ளலாம். காற்று அடிக்குந் திசையைப் படத்திலிருக்கும் கருவியினால் தெரிந்து கொள்வதுண்டு. காற்று அடிக்கும் போது தெருவிலுள்ள தூசிகள் பறந்து ஓடும். காற்று பலமாக வீசும்போது மணல் தூசிகள் நம்மேல் சுரீர் சுரீர் என்று குத்தும். சூரிய உஷ்ணம் கொஞ்சம் குறைவாகவிருக்கும்.



காற்று நாலா பக்கங்களிலிருந்தும் வீசும். தெற்கேயிருந்து வீசும் காற்று தென்றல் எனப்படும். இது தேகத்திற்குச் சுகமாக விருக்கும். கிழக்கிலிருந்து வீசும் காற்று கீழ் காற்று எனப்படும். மேற்கிலிருந்து வீசும் காற்று மேல் காற்று. வடக்கிலிருந்து வீசும் காற்று வாடைக் காற்று எனப்படும். உஷ்ண காலத்தில் காற்று வறண்டு இருக்கும். அதனால்தான் துணிகள் சீக்கிரம் உலருகின்றன. மழைக் காலத்துக் காற்றில் ஈரம் நிறைந்திருக்கும். அதனால்தான் துணிகளிலுள்ள ஈரத்தைக் காற்று சீக்கிரம் இழுப்பதில்லை; துணிகள் உலருவதற்கும் நேரமாகிறது.

ரயில், டிராம் முதலிய வண்டிகளில் நீ பிரயாணஞ் செய்யும்போது எங்குஉட்காரப் பிரியப்படுவாய்? காலியாகவுள்ள இடத்தில் அல்லவா? உனது வகுப்பில் கூட்டமாகவுள்ள பெஞ்சில் நீ உட்காரப் பிரியப்படுவாயா? அல்லது காலியாகவுள்ள பெஞ்சியிலா? அது போலவே காற்றும் நெருக்கமாகவுள்ள இடத்திலிருந்து காலியான இடத்தை நோக்கிஓடி வரும். இப்படிக் காற்று சில சமயங்களில் சமுத்திரத்திலிருந்து தரையை நோக்கியும், சில சமயங்களில் தரையிலிருந்து சமுத்திரத்தை நோக்கியும் வீசுகிறது. காற்று எங்கிருந்து கிளம்புகிறதோ அல்லது எந்தத் திசையிலிருந்து கிளம்புகிறதோ, அந்தப் பெயரே அக்காற்றுக்கு வழங்குவதுவழக்கம். தரையிலிருந்து வீசும் காற்று தரைக் காற்று. சமுத்திரத்திலிருந்து வீசும் காற்று சமுத்திரக் காற்று. சமுத்திரக் காற்றில் நீராவி நிறைந்திருக்கும். தரைக் காற்று வறண்டு இருக்கும்.

சமுத்திரக் காற்று:—நிலம் நீரை விடச் சீக்கிரம் சூரிய உஷ்ணத்தை வாங்கி சீக்கிரத்தில் விட்டு விடும் தன்மையுள்ளது. ஆகவே பகல்



ஒன்று அல்லது 2 மணி ஆனதும் நிலம் நன்றாக உஷ்ணமடைகிறது. அதனால் அதற்கு மேலுள்ள ஆகாயமும் உஷ்ணமடைந்து, பெரிதாகி, லேசாகிச் சிறிது பாகம் மேலே கிளம்புகிறது. அப்போது அந்தக் காலி இடத்தை அடைத்துக் கொள்ளச் சமுத்திரத்தின் மேலுள்ள குளிர்ந்த காற்று நிலத்தை நோக்கி வீசுகிறது. இதற்கு சமுத்திரக்காற்று என்று பெயர். இக்காற்றுசாயங்காலம்4மணி முதல் இரவு 10 மணிவரையில்வீசும்

தரைக் காற்று:—சூரியன் அஸ்தமித்ததும் நிலம் சீக்கிரம் குளிர்ந்து விடுகிறது. இரவு 12 அல்லது 1



மணிக்கு நிலப்பாகம் நன்றாகக்குளிர்ந்தும் கடல் உஷ்ணமாயும் இருககிறது ஆகவே கடலின் மேலுள்ள ஆகாயம் உஷ்ணமடைந்து, பெரிதாகி, லேசாகி அதன் சிறிது பாகம் மேலே கிளம்ப, அந்தக் காலி இடத்தை அடைத்துக்கொள்ள நிலத்திலிருந்து காற்று கடலை நோக்கி வீசுகிறது இதற்கு தரைக் காற்று என்று பெயர். இது சாதாரணமாய் இரவு 4 மணி முதல் பகல் 9 மணி வரையில் வீசும்.

கேள்விகள்

1. காற்று என்றால் என்ன ?
2. காற்று நமக்கு அவசியமா ? ஏன் ?
3. தென்றல், வாடைக் காற்று—விளக்கிச் சொல்லு.
4. சமுத்திரக் காற்று எப்படி உண்டாகிறது ? அது எப்போது வீசுகிறது ?
5. தரைக்காற்று எப்படி உண்டாகிறது? எப்போது வீசுகிறது ?
6. தரைக் காற்றுக்கும் சமுத்திரக் காற்றுக்கும் உள்ள வித்தியாசம் யாது ?

6. மழையும், அதன் வேலையும்

ஒரு ஈரத் துணியைப் பிரித்து வெயிலில் உலர்த்து. கொஞ்சநேரம் கழித்து அதைப் பார். அத் துணி உலர்ந்து போயிருக்கும். துணியிலுள்ள ஜலம் எங்கே? காற்றினாலும், சூரிய உஷ்ணத்தினாலும் ஆவியாகப் போய் விட்டது ஒரு கெட்டிலில் தண்ணீரை ஊற்றி அதை அடுப்பின்மேல் வைத்துத் தீ மூட்டிக் காய்ச்சு. சற்று நேரத்திற்கெல்லாம் தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கிறது. தண்ணீர் நன்றாகக் கொதித்தவுடன் நீராவி 'குப், குப்' என்று கெட்டிலின் மூக்கு வழியாக வருகிறது. வந்த நீராவி என்ன ஆகிறது? மேலே கிளம்பிக் காற்றோடு கலந்து மேகமாக மாறுகிறது. நீராவியை நாம் நீர் நிலைகளில் பார்க்கலாம். வெயிற் காலங்களில் குளக்கரையில் நின்று குளத்தைக் கவனி. குளத்திலிருந்து தண்ணீர் சூரிய உஷ்ணத்தினால் ஆவியாக மாறிக் குமுழிகளாக உயரே கிளம்புவது தெரிய வரும்.

நீராவியினால் நமக்கு என்ன பயன்? நீராவிதான் நமக்கு மழை பெய்விக்கிறது. ஒரு கெட்டிலில் தண்ணீரைக் கொதிக்க விடு. சற்று நேரம் ஆன

வுடன் ஒரு சிலேட்டை அதன் மூக்கினருகில் பிடித்துப் பார். சிலேட்டில் நீராவித் துளிகளைக் காண்கிறோம். இதில் குளிர்ந்த காற்றுப்பட்டு நீராவித் துளிகள் நீர்த் துளிகளாகச் சொட்டுகின்றன.

மேலே சொன்னபடிதான் மழையும் உண்டாகிறது. சமுத்திரம், ஏரி, ஆறு, குளம், குட்டை முதலியவற்றிலுள்ள ஜலம் சூரிய உஷ்ணத்தினால் ஆவியாக மாறி இலேசாகி மேலே கிளம்புகிறது. நீராவிக் கூட்டங்கள் அதிகமாகி, மேகமாக மாறிக் காற்று

டன் செல்லும்போது குளிர்ந்த மலைகளின் மேல் பட்டவுடன் மழை

யாகப் பெய்கிறது. மழை பெய்வதற்கு ஏராளமான உஷ்ணம், நீராவி, காற்று இவை வேண்டும்.

மழை பெய்யும்போது கவனி. பல நீர்த் துளிகள் வானத்திலிருந்து



விழுகின்றன. ஒரு இடத்தில் பெய்யும் மழையின் அளவை இம்மாதிரி மழை அளக்கும் கருவியைக் கொண்டு அளப்பார்கள். இத்துளிகள் ஒன்று சேர்ந்து பலகால்வாய்களாகத் தெருக்களில் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடும். பல தெருக்களின் மழை ஜலம் ஒரு பெரிய தெருவில் சேர்ந்து ஒரு ஆறு போல் ஓடும். அது மிகவும் கலங்கி இருக்கும். மழை ஜலம் ஆறுபோல் ஓடி, வாய்க்கால்களில் விழும். அநேக சிறு வாய்க்கால்கள் சேர்ந்து ஒரு பெரிய ஆறு ஆகும். ஆற்று நீர் பல ஊர்களின் வழியாக ஓடி, வழியிலுள்ள ஏரி குளம் குட்டைகளை நிரப்பிவிட்டு, சமுத்திரத்தில் கலக்கும். ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் நம் ஊர் ஆறுகளில் புது வெள்ளம் வருவதைக் கவனியுங்கள். எங்கேயோ பெய்கின்ற மழை, ஆறுகளின் மூலம் புரண்டு வந்து நமக்குத் தண்ணீர் கொடுக்கிறது. மழை ஜலம் விழும் வேகத்தில் மலைகளைத் தகர்த்துக் கற்களையும், மணலையும் உண்டாக்குகிறது. மழை ஜலம் அங்குள்ள மண்ணை அடித்துக்கொண்டு வருவதால்தான் ஆற்றில் புதுவெள்ளம் வரும்போது ஜலம் மிகவும் கலங்கியிருக்கிறது. ஆகவே, ஆற்று ஜலம் மண்ணை ஓரிடத்திலிருந்து



மற்றோரிடத்துக்குக் கொண்டுசெல்லுகிறது. ஆற்றில் வரும் தண்ணீரைக் கொண்டு நான் தாம் சாகுபடிக்கு ஆரம்பிக்கிறோம். ஆற்று ஜலம் கொண்டு வரும் வண்டல் மண் நிலத்திற்குச் சிறந்த எருவாகும். ஆனால் ஆற்று ஜலம் கடற்கரையை அடையும் போது அதன் வேகம் குறைகிறது. ஆற்று ஜலத்தோடு மிகுந்து வந்த வண்டல் மண் அங்குப் படிந்து நிலம் மேடாகிறது. இவ்விதம் ஏற்பட்ட நிலம் சாதாரணமாய் முக்கோண வடிவமுள்ளது. இதை டெல்டா என்று சொல்லுவார்கள்.

மழைத் தண்ணீரில் சிறிது பாகம் பூமியில் சுவறிப் போகும்; சிறிது பாகம் ஆவியாகப் போகும்; சிறிது பாகம் நீர் நிலைகளை நிரப்பும்; பாக்கியுள்ளது ஆறுகளின் வழியாகச் சமுத்திரத்தில் போய்ச் சேருகிறது. சமுத்திரத்திலுள்ள ஜலம் மறுபடியும் ஆவியாக மாறி மழையாகப் பெய்கிறது.

மழை நமக்கு மிகவும் இன்றியமை யாதது. மழைதான் நமக்குத் தண்ணீர் கொடுக்கிறது. தண்ணீர் இல்லாவிடில் ஒரு பிராணியும் உயிர் வாழ முடியாது; புல் பூண்டுகள் முளையா; ஆறு குளங்களில் தண்ணீர் இரா; நாம் எல்லோரும் கஷ்டப்படுவோம். ஆகையால் மழை மிகவும் அவசியமானது. மழையே சகல உயிர்களுக்கும் ஜீவாதாரமானது.

நீ உன் நோட்டுப் புத்தகத்தில் தினசரியுள்ள மிக உஷ்ண அளவையும், மிகக் குறைவான உஷ்ண அளவையும், மழை பெய்யும்போது மழையின் அளவையும் தினசரிப்பத்திரிகையைப் பார்த்துக் குறித்துவா. இதைத் தயார் செய்ய உன் உபாத்தியாயர் உதவி செய்வார்.

கேள்விகள்

1. மழை எப்படி உண்டாகிறது?
2. மழையினால் என்ன பிரயோஜனம்?
3. மழைத் தண்ணீர் என்னவாகிறது?
4. டெல்டா என்றால் என்ன? அது எப்படி உண்டாகிறது?
5. நமது ஜில்லாவில் மழைக் காலம் எது?
6. மழை எப்படி அளக்கப்படும்?

7. கடல்: கடற் பிரயாணம்

சென்ற பாடத்தில் ஆற்று நீர் எங்கே போய்க் கலப்பதாகச் சொன்னோம்? சமுத்திரத்திலல்லவா? உன் ஊருக் கருகில் சமுத்திரம் இருக்கின்றதா? நீ சமுத்திரத்தைப் பார்த்திருக்கிறாயா? இல்லாவிடில் நீ ஒரு முறை அவசியம் பார்க்கவேண்டும்.

சமுத்திரம் என்பது என்ன? அது ஒரு விசாலமான நீர்ப் பரப்பு. சமுத்திரத்தின் நீள அகலம் ஆயிரக் கணக்கான மைல்களாக இருக்கும். சமுத்திரத்தின் மற்ற கரைகள் நம் கண்களுக்குப் புலப்படா.

உன் ஊருக்கருகிலுள்ள சமுத்திரத்தைப் போய்ப்பார். அங்குள்ளவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கவனி. சமுத்திரக் கரையோரத்திலுள்ள செம்படவர்கள் சிறுபடகுகளில் ஏறிச் சென்று சமுத்திரத்தில் மீன் பிடிக்கிறார்கள். இன்னும் சிலர் சமுத்திரத்துத் தண்ணீரைக் கால்வாய்களின் மூலம் பாத்திகளில் பாய்ச்சிக் காய்ந்தவுடன் உப்பு எடுக்கிறார்கள். இன்னும் சிலர் பாய் கட்டிக் கப்பல்களின் மூலம் சாமான்களை ஏற்றிக்கொண்டு பக்கத்திலுள்ள ஊர்களுக்குப் போய் வியாபாரஞ் செய்கின்றனர். முன்

காலத்தில் இப்பாய் மரக் கப்பல்களே சமுத்திரத்தில் பிரயாணஞ்செய்யஉபயோகப்பட்டுவந்தன. கப்பலின் நடுவிலுள்ள ஓர் உயர்ந்த மரத்தில் பாயை விரித்துக் கட்டினால், காற்று அதில் மோதி இக் கப்பல்கள் வெகு தூரம் செல்லச் சாதகமாயின.

தேசப் படத்தைப் பார். உன் ஊருக்கு அருகிலுள்ள சமுத்திரம் எது? சமுத்திரக்கரைப் பட்டினம் எது? சமுத்திரக்கரையின் அப்பாலுள்ள நாடுகளைக் கவனி. நம் நாடுகளுக்கும் இந்த அயல் நாடுகளுக்கும் ஜனங்கள் போய் வருகிறார்கள்; சாமான்களும் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன. இவை எப்படி? சமுத்திரத்தைத் தாண்டிச் செல்லக் கப்பல்கள் உபயோகமாகின்றன. முன் நாட்களில் மரக் கப்பல்கள் உலாவி வந்தன. இப்போது பெரிய, பெரிய

நீராவிக் கப்பல்கள் ஆபத்தில்லாமல் பல தேசங்களுக்குப் பிரயாணஞ்



செய்து வருகின்றன. நமது ஊருக் கருகிலுள்ள துறைமுகப் பட்டினத்தி லிருந்து இலங்கை, இரங்கூன், சிங் கப்பூர், ஜப்பான், ஆப்பிரிக்கா, இங்கி லாந்து, ஆஸ்திரேலியா முதலிய அயல் நாடுகளுக்கு நீராவிக் கப்பல் கள் மூலம் தற்காலத்தில் ஏராளமான போக்கு வரவு நடைபெற்று வருகின் றது.

கடல்பிரயாணத்தில் பல நாடுகளைக் காணச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆகவே, பல நாட்டினர்களின் நடை, உடை, பாவனைகளை அறிந்துகொள் வது மல்லாமல், அந்நாட்டின் சிறப்பு, விளைபொருள், கைத்தொழில், வியாபாரம் முதலிய விஷயங்களைப் பற்றியும் உபயோகமுள்ள பல விஷ யங்களைப்பற்றியும் அறிந்துகொள்ள லாம்.

கேள்விகள்

1. நீ சமுத்திரம் பார்த்திருக்கிருயா? உன் ஊருக்கு அருகிலுள்ள சமுத்திரக்கரை ஊர் எது?

2. கடற்கரை யோரத்திலுள்ளவர்கள் என்ன தொழில் செய்கிருர்கள்?

3. கடலில் எப்படிப் பிரயாணம் செய் கிருர்கள்?

4. கடற் பிரயாணத்தால் ஏற்படும் நன்மை கள் யாவை?

8. கிராமமும், பட்டணமும்— பட்டணம் ஏற்படும் விதம்

நீ வசிக்கும் ஊரின் பெயரென்ன? அதில் எத்தனை தெருக்கள்? எத் தனை வீடுகள்? உங்கள் ஊரில் எத் தனை ஜனங்கள் வசிக்கிருர்கள்? முடியுமானுல்சுமாராகக் கணக்கிட்டுச் சொல். இல்லாவிடில் உபாத்தியாய ரைக் கேட்டுத் தெரிந்துகொள்.

சில வீடுகள் அடங்கியது கிராமம் எனப்படும். கிராமமே அரசாங்கத் தின் மிகச் சிறிய பிரிவு ஆகும். கிரா மத்தில் வீடுகளும், தெருக்களும், கடை கண்ணிகளும் அதிகம் இரா. கிராமத்தைச் சுற்றி நன்செய், புன் செய் நிலங்களும், தோப்புக்களும், தோட்டங்களும்சூழ்ந்திருக்கும். கிரா மத்தில் சில கோவில்களும், குளங்க ளும், பொது இடங்களும் உண்டு. கிராமத்தில் விசாலமான திறந்த வெளிகளிருப்பதால் நல்ல காற்றும், நல்ல தண்ணீரும் கிடைக்கும். ஜன நெருக்கம் குறைவானதால், தேக சௌக்கியத்திற்கு ஏற்றது. காய்கறி களும், பால், தயிர், நெய் முதலியன வும் மலிவாகக் கிடைக்கும்.

சுமார் ஐயாயிரம் ஜனங்களுக்கு மேலுள்ள ஊர்கள் பட்டணங்கள் எனப்படும். பட்டணங்களில் அநேக தெருக்களும், வீடுகளும், கடைகளும், கடைவீதிகளும், பள்ளிக்கூடங்களும் ஆபீஸ்களும் இருக்கும். பட்ட ணங்களில் ஜன நெருக்கம் அதி கம். வசிப்பதற்கு வீடுகளும் கிராக்கி யாக விருக்கும். நல்ல காற்றுக் குறைவு. பால், தயிர், நெய், காய்கறி முதலியவை வெளியூர்களிலிருந்து வரவேண்டி யிருப்பதால் மலிவாக வும், புதிதாகவும், சுத்தமாகவும்இரா. ஆனுலும் கல்வி வசதி, வைத்திய

வசதி, பொழுதுபோக்கு வசதி முதலியன பட்டணங்களில்தான் உண்டு.

உன் ஊருக் கருகிலுள்ள பட்டணம் எது? அதில் சுமார் எத்தனை தெருக்கள்? வீடுகள்? ஜனங்கள்? அப்பட்டணத்திலுள்ள ஆபீஸ்கள் எவை? பள்ளிக்கூடங்கள் எத்தனை? இவைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்.

பட்டணங்கள் எங்கு உண்டாகின்றன? பட்டணங்கள் எல்லா விடங்களிலும் ஏற்படுவதில்லை. அவை ஏற்படச் சில காரணங்கள் உண்டு. அக்காரணங்கள் பற்றியே பட்டணங்கள் ஏற்படும். நீர்வளம், நிலவளம் பொருந்திய இடங்களிலும், வியாபாரம் மிகுதியாகவுள்ள இடங்களிலும், அரசாங்கத்தின் முக்கியப் பட்டணங்களிலும், ரோடுகள், இருப்புப்பாதைகள் சந்திக்கும் இடங்களிலும், புண்ணிய க்ஷேத்திரங்கள் உள்ள இடங்களிலும், தொழிற்சாலைகள் உள்ள இடங்களிலும்பட்டணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எந்தப் பட்டணத்தை எடுத்துக்கொண்டாலும், இவ் விஷயங்களில் ஒன்று அப்பட்டணம் உண்டாவதற்குக் காரணமாய் இருக்கும். ஏதோ ஒரு காரணத்தால் ஜன நெருக்கம் அதிகமாகிப் பட்டணமாகிறது. அதனால், மற்ற வசதிகளும் உண்டாகி, நாளடைவில் பெரிய பட்டணங்கள் ஆகிவிடுகின்றன. நமது மாகாணத்தின் தலை நகராக விளங்கும் சென்னைப்பட்டணம் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் ஒரு சிறு கிராமமாகவே இருந்தது. ஐரோப்பியர்கள் வியாபாரத்திற்காக வந்து தங்கி, கோட்டை ஒன்று கட்டினார்கள். வியாபாரத்தை நாடிப் பல ஜனங்கள் குடியேறி, மற்றவசதிகளும் நாளடைவில் விருத்தியாகி, சென்னை இப்போது இந்தியாவில் மூன்றாவது பெரிய பட்டணமாக விளங்குகிறது. கல்கத்தாவும் அப்படியே.

வேலூர், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை முதலிய பட்டணங்கள் முன்காலம் முதல் அரசாங்கத் தலை நகரங்களாக இருந்து வருகின்றன. அதோடுங்கூட அவைகளில் வியாபாரமும் அதிகம்.

காஞ்சீபுரம், ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் முதலியன புண்ணிய ஸ்தலங்கள்.

சில வருஷங்களுக்கு முன் விழுப்புரம் ஓர் சிறிய ஊராக விருந்தது. இப்போது அங்குப் பல இருப்புப் பாதைகள் சந்திப்பதால் அது ஒரு பெரிய ஊராகிவிட்டது. சுமார் இருபது வருஷங்களுக்குமுன் திருச்சிக் கருகிலுள்ள பொன்மலை பொட்டல் திடலாக விருந்தது. அங்கு, தென்னிந்தியா இருப்புப்பாதையின் தொழிற்சாலை ஏற்பட்டவுடன் அது ஒரு பெரிய பட்டணமாகி விட்டது. ஜன நெருக்கம் அதிகமானவுடன், பட்டணங்களில் உள்ளவர்கள் சௌகரியமாக வசிக்கும் பொருட்டு, பட்டணத்திற்கு அருகிலுள்ள காலி இடங்களில் வீடுகள் கட்டிக்கொள்கிறார்கள். நாளடைவில் இவ்விடங்களும் பட்டணங்களாகி விடுகின்றன. சென்னைப் பட்டணத்துக்கருகில் உள்ள தியாகராயநகர், தாம்பரம், வில்லிவாக்கம் முதலியவை இம் மாதிரி ஏற்பட்டவையே. பட்டணமானவுடன் கடைகளும், கல்வி வசதிகளும், வைத்திய வசதிகளும், பொழுதுபோக்கு வசதிகளும் அதிகமாக ஏற்பட்டு விருத்தி யடைகின்றன.

9. நாட்டு வாழ்க்கையும், நகர வாழ்க்கையும்

கிராமத்தில் உள்ளவர்களின் முக்கியத் தொழில் விவசாயம். நிலத்தை உழுது பயிரிட்டு ஜீவனம் செய்வதே கிராமவாசிகளின் முக்கியத் தொழில். குடியானவர்களுக்கு உதவியாக மரச்சாமான்கள் செய்யத் தச்சன்களும், இரும்புச்சாமான்கள் செய்துகொடுக்கக் கருமான்களும், மண்பாண்டங்கள் செய்துகொடுக்கக் குயவர்களும், இன்னும் தட்டான், வண்ணான், கடைக்காரன், வாணியன், சேணியன் முதலிய தொழிலாளிகளும் இருக்கிறார்கள்.

பட்டணத்திலுள்ளவர்களின் வாழ்க்கைகிராமவாழ்க்கையினின்றும்வித்தியாசப்படும். அவர்களிற் சிலர் வியாபாரம்செய்பவர்; சிலர் கைத்தொழிற்சாலைகளில் கூலிவேலை செய்பவர்; சிலர்உத்தியோகசாலைசென்றுவேலை பார்த்து வருபவர்; சிலர் வக்கீல் தொழில்புரிந்தும்,சிலர்உபாத்திமைத்தொழில் செய்தும் ஜீவித்து வருபவர். இவர்களுக்குஉதவியாகத்தச்சன் தட்டான், கருமான், கொல்லன், வண்ணான், நாவிதன், தையற்காரன், வாணியன், சேணியன், கூலி வேலை செய்பவன் முதலியவர்களும் இருப்பார்கள்.

கிராமத்திலுள்ளவர்கள், இஷ்டப்படி சுயேச்சையாகத் தங்கள் வேலைகளைச் செய்து வருவர். பட்டணத்திலுள்ளவர்கள் ஆபீஸ்களிலும், தொழிற்சாலைகளிலும் குறிப்பிட்ட நேரங்களில் போய் வேலை பார்த்து வருவர். கிராமத்திலுள்ளவர்களைவிட, பட்டணத்தில் வாழ்பவர் அதிக நாகரீகமுள்ளவர்களாக இருப்பார்கள்.

கேள்விகள்

1. கிராமம் என்றால் என்ன ? பட்டணம் என்றால் என்ன ?
2. நீ வசிப்பது கிராமமா ? பட்டணமா ?
3. கிராமத்திற்கும் பட்டணத்திற்குமுள்ள வித்தியாசம் யாது ?
4. கிராம வாழ்க்கை தேக சுகத்திற்கு ஏற்றது. ஏன் ?
5. கிராமத்திலுள்ளவர்களின் தொழில் யாது ?
6. பட்டணத்தி லுள்ளவர்களின் தொழில் யாது ?
7. கிராமத்தில் இல்லாததும் பட்டணத்தில் உள்ளதுமான சில வசதிகளைச் சொல்லு.
8. பட்டணங்கள் என்னென்ன காரணங்களால் ஏற்படுகின்றன ?
9. பட்டணத்திலுள்ளவர்களுக்கும் கிராமத்திலுள்ளவர்களுக்கும் வாழ்க்கையிலுள்ள வித்தியாசங்கள் யாவை ?

10. பயிர்கள்

பிள்ளைகளே, நாம் நம் வீட்டில் உணவுக்காகப் பல சாமான்களை உபயோகிக்கிறோமல்லவா? அவைகள் என்னென்ன? அரிசி, பருப்பு, மிளகாய், கடுகு, வெந்தயம், உப்பு, புளி, எண்ணெய், சர்க்கரை, வெல்லம், சோளம், கம்பு, கேழ்வரகு, காப்பிக் கொட்டை, தேயிலை, புகையிலை, பருத்தி முதலியன. அவைகள் நமக்கு எப்படிக்கிடைக்கின்றன? அவை பல பயிர்களிலிருந்து கிடைக்கின்றன. அவைகளில் சில, நம் ஊரிலேயே கிடைக்கும்; சில, வெளியூர்களிலிருந்து வருகின்றன. அவைகளைப் பற்றி விவரமாகத் தெரிந்துகொள்வோம்.

பயிர்கள், நில வளத்திற்கும் நீர் வளத்திற்கும் ஏற்றவாறு பயிராகும். ஆகையால் நிலத்தின் தரத்திற்கு ஏற்றபடி பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. சில, நன்செய்ப்பயிர்கள்;

சில, புன்செய்ப் பயிர்கள்; சில, தோட்டக்கால் பயிர்கள்; சில, மலையில் விளையும் பயிர்கள். இப்படியாகப் பயிர்கள் பல வகையாகும்.

நன்செய்ப் பயிர்கள் என்றால் என்ன? நன்செய் வயலில் விளையும். பயிர்கள் நன்செய்ப் பயிர்கள் எனப்படும். தண்ணீர் நிறையத் தேங்கி நிற்கும் நிலங்கள் நன்செய் நிலங்கள் ஆகும். முக்கியமாக நெல், கரும்பு இவை யிரண்டும் நன்செய்ப் பயிர்கள். இப்பயிர்களுக்கு ஏராளமான தண்ணீரும், உஷ்ணமும் வேண்டும். அதோடு நில வளமும் செழுமையாக இருக்கவேண்டும். நமது நாட்டு விளைபொருள்களில் மிகவும் முக்கியமானது நெல். நெல்லிலிருந்து அரிசி கிடைக்கிறது. அரிசியே நமக்கு முக்கிய உணவுப் பொருளாகும். ஆகையால் நெல் எங்கும் சாதாரணமாகப் பயிரிடப்படுகிறது.

கரும்பு:—கரும்பிலிருந்து சாறு எடுத்துக் காய்ச்சி வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியவை செய்கிறார்கள். நம் நாட்டில் சில விடங்களில் இது பயிர் செய்யப்படுகிறது. ஆனால் அவ்வளவு ஜாஸ்தியாக இல்லை.

புன்செய்ப் பயிர்கள் என்றால் என்ன? புன்செய் நிலத்தில் பயிரிடப்படும் பயிர்கள் புன்செய்ப் பயிர்கள் எனப்படும். புன்செய் நிலத்தில் தண்ணீர் தேங்கி நிற்காது. புன்செய் நிலங்கள் மேட்டில் இருக்கும். தண்ணீர் அதிகம் வேண்டாத சோளம், கம்பு, கேழ்வரகு, வேர்க்கடலை, புகையிலை, துவரை, உளுந்து, பயறு, எள், சவுக்கு முதலிய பயிர்கள் ஆற்றுப் படுகை, திடல் முதலிய புன்செய் நிலங்களில் பயிரிடப்படுகின்றன.

எண்ணெய் வித்துக்கள்:—எண்ணெய் வித்துப் பயிர்களில் முக்கியமானவை தென்னை, எள், வேர்க்கடலை, ஆமணக்குமுதலியன. இவைகள் எல்லாம் புன்செயிலேயே பயிரிடப்படுகின்றன.

பருத்தி:—இது ஒரு முக்கியமான பயிர். பருத்தியிலிருந்து நூல் எடுத்துத் துணிநெய்கிறார்கள். பருத்திக்கு நிலம் கரிசலாக இருத்தல்வேண்டும். இப் பயிருக்கு அதிகத் தண்ணீர் வேண்டியதில்லை. கரிசல்மண்ணுள்ள களிப்பு நிலங்களில் இது பயிரிடப்படுகிறது.

தோட்டக்கால் பயிர்கள்:—கத்தரி, வெண்டை, கருணை, சேம்பு, அவரை, புடல், பாகல், வாழை, அகத்தி, வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகாய் முதலிய பயிர்கள்தோட்டக்கால் பயிர்கள். இவைகள் எல்லாம் நம் ஊர்களில் ஆங்காங்கு பயிரிடப்படுகின்றன.

இவைகளைத் தவிர வேறு சில பயிர்களுமுண்டு. காப்பிக்கொட்டை, தேயிலை, உருளைக்கிழங்கு, மிளகு, ஏலம் முதலிய பொருள்கள் மலைச் சரிவுகளில்தான் பயிராகும். உன் ஊரில் எந்த எந்தமாதத்தில், என்ன என்ன பயிரிடப்படுகிறதென்றும், எப்பொழுது மாசூலைக் கொடுக்கின்றன என்றும் கேட்டுத் தெரிந்துகொள்.

கேள்விகள்

1. நன்செய் நிலம் என்றால் என்ன?
2. புன்செய் நிலம் என்றால் என்ன?
3. நன்செய்ப் பயிர்கள் யாவை? புன்செய்ப் பயிர்கள் யாவை?
4. உன் ஊரில் பயிரிடப்படும் நன்செய்ப் பயிர், புன்செய்ப் பயிர்களைச் சொல்லு.
5. தோட்டக்கால் பயிர்களில் சிலவற்றைச் சொல்லு.
6. உன் ஊரில் விளையாத பொருள்கள் யாவை?

11. போக்குவரவு

நாம் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. தவிரவும், நமக்கு வேண்டிய சாமான்களில் சில, வெளியூர்களிலிருந்துவரவேண்டியுமிருக்கின்றன. நம் ஊரிலுள்ள சாமான்களை வெளியூர்களுக்குக் கொண்டுபோகவேண்டியுமிருக்கின்றன. நாம் பிரயாணம்செய்யவும், சாமான்களைச் சுமந்து செல்லவும், பலவித வாகனங்களை உபயோகிக்கிறோம். அவைகள் மாட்டு வண்டி, குதிரை வண்டி, மோட்டார் வண்டி, ரயில் வண்டி முதலியன. இவ்வண்டிகளின் போக்குவரத்துக்கு நல்ல சாலைகள் அவசியம். சாலைகள் இல்லாவிடில் நாம் சாமான்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்ய முடியாது. ஆகையால் போக்கு வரவுக்குச் சாலைகள் இன்றியமையாதன. அவைகளில்லாவிடில் நாம் மிகவும் கஷ்டப்படுவோம்.

சாலைகளில் பலவகையுண்டு. அவைகளில் சில, மண்சாலைகள்; சில, கருங்கற்சல்லி போட்டுக் கெட்டித்த சாலைகள்; சில, தார்போட்டசாலைகள். மண் சாலைகளில் போக்குவரத்து செய்வது கஷ்டம். மழை நாட்களில் அவைகள் சேறாய் இருக்கும். சிற்சில சமயங்களில் வண்டிச் சக்கரங்கள் சேற்றில் நன்றாய்ப் பதிந்துவிடும். ஆகையால் போக்குவரத்துக்கு இவ்விதச் சாலைகள் கொஞ்சம் சௌகரியக்குறைவாகவிருக்கும். இம்மாதிரிச் சாலைகள் கிராமங்களில் உள்ள கிளைச் சாலைகளே.

போக்குவரத்துஜாஸ்தியாகவுள்ள முக்கியச் சாலைகள் கப்பி போடப்பட்டவைகள். இச்சாலைகள் கப்பி போட்டுக் கெட்டித்திருப்பதால் போக்கு வரவுக்குச் சௌகரியமானவை. அவைகள்சமமாகஇருப்பதோடு சேறாக இராது. ஆகையால் மாட்டு வண்டி, குதிரைவண்டி, மோட்டார் வண்டி முதலியவை இச்சாலைகளில் போய் வருகின்றன.

பட்டணங்களில் உள்ள சாலைகளுக்கும், இன்னும்சில முக்கியமான சாலைகளுக்கும் தார் போடப்பட்டிருக்கிறது. தார்போடப்பட்ட சாலைகளுக்கு அடிக்கடி செப்பனிட வேண்டியதில்லை. வண்டிகள் போகும்போது சத்தமும் அதிகமாக இராது. தவிரவும் வண்டிச் சக்கரங்களும், குதிரைலாடங்களும் சீக்கிரம் தேயா.

தூர ஊர்ப் பிரயாணங்களுக்கு நாம் ரயில்வண்டிகளின் மூலமாய்ச் செல்லுகின்றோம். ரயில் வண்டிகள் இருப்



புப் பாதைகளின் மேல் செல்லுகின்றன. அநேகமாக ஒவ்வொரு முக்கிய ஊரும் இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டிருக்கிறது.

ஆறுகளும், கால்வாய்களும் உள்ள ஊர்களில் படகுகள் மூலமாகப் போக்கு வரவு செய்கிறார்கள். சாமான்களைப் படகுகளிலேற்றி ஆறுகள் மூலம் வேறு ஊருக்குக் கொண்டு சேர்ப்பார்கள். படகுகள் மூலம் சாமான்கள் கொண்டு செல்லுவதில் செலவு குறைவு; ஜாஸ்தி சாமான்களும் கொண்டு போகலாம். சாலைகள் ஏற்படாத முன்னாட்களில் ஆறுகளும், கால்வாய்களுமே முக்கியப் போக்கு வரவு மார்க்கங்களாக விளங்கின.

கடலைத்தாண்டி அயல் நாடுகளுக்குப் போகக் கப்பல்கள் உபயோகப்பட்டு வருகின்றன. கப்பல்கள் வந்து தங்கி ஏற்றுமதி இறக்குமதி செய்ய அநேக துறைமுகங்கள் சமுத்திரக் கரையோரங்களில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி பின்னொரு பாடத்தில் விரிவாகப் படிப்போம். தவிரவும் ஆகாய மார்க்கமாக ஆகாய விமானங்கள் வெகு சீக்கிரமாக அயல்நாடுகளுக்குச் சென்றுவருகின்றன. ஆகாயவிமானங்கள் வந்து



தங்க சென்னைக்கருகில் மீனம்பாக்கத்திலும், திருச்சிக்கருகிலும் ஆகாய விமானச் சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன.

கேள்விகள்

1. சாலைகளின் உபயோகம் என்ன?
2. சாலைகளில்லாவிடில் என்ன நேரிடும்?
3. சாலைகளில் எத்தனை வகைகளுண்டு? அவைகளை நீ பார்த்திருக்கிறாயா? எங்கு?
4. உங்கள் ஊரிலிருப்பது கிளைச்சாலையா? முக்கியச் சாலையா? உங்கள் ஊர்ச்சாலை எந்த முக்கியச் சாலையில் சேருகிறது?
5. உன் ஊருக்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் எவ்வளவு தூரம்? உன் ஊர் ஸ்டேஷனுக்கு இரு பக்கங்களிலுமுள்ள ஆறு ஸ்டேஷன்களைச் சொல்லு.
6. ஆறுகள், கால்வாய்கள் எப்படி போக்குவரத்துக்கு உபயோகப்படுகின்றன? உன் ஊருக்கருகில் கால்வாய்கள் உண்டா? அவைகளின் மூலம் என்னென்ன சாமான்கள் ஏற்றுமதி, இறக்குமதி?
7. நீ ஆகாய விமானம் பார்த்திருக்கிறாயா? அதில் பிரயாணஞ்செய்வதனால் என்ன அனுகூலம்?

12. சந்தை

நாம் அநேக சாமான்களை உபயோகிக்கிறோம். அவைகளில் சில நம் ஊரிலேயே கிடைக்கின்றன. கிடைக்காதவற்றை நாம் எங்கு வாங்குகிறோம்? கடைகளிலல்லவா? சிலசமயங்களில் கடைகளில் சாமான் கிடைக்காது. கிடைத்தாலும் நமக்கு வேண்டிய அளவு இருக்காது. அதற்காக நாம் என்ன செய்வது? நமக்கு வேண்டிய சாமான்களை மொத்தமாகச் சந்தையில் அல்லது பெரிய மளிகைக் கடைகளில் வாங்குகிறோம்.

உங்கள் ஊரில் சந்தை உண்டா? இல்லாவிடில் உங்கள் ஊருக்குச் சமீபத்திலுள்ள சந்தை எது? அங்கு எந்தக் கிழமையில் சந்தை கூடுகின்றது? உங்கள் ஊரிலிருந்து சந்தைக்குப் போகிறவர்களோடு நீயும் ஒரு நாள் சந்தைக்குப் போய்ப் பார்த்து வா. சந்தைக்குப் போகிறவர்கள் என்ன சாமான்கள் எடுத்துப் போகிறார்கள் என்பதையும் கவனி.

இங்கு அநேக ஜனங்கள் கூடியிருப்பதைப் பார். இது ஒரு சந்தை.



இந்தச் சந்தையில் அநேக சாமான்கள் வைத்திருக்கிறார்கள். நெல், அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய், வெல்லம், காய்கறி வகைகள், பாய், துணி, புத்தகங்கள், நெருப்புப்

பெட்டி, சட்டி பானை, கூடை, முறம், விசிறி, தகரசாமான்கள், விளையாட்டு சாமான்கள், மண்ணெண்ணெய், இலுப்பக்கட்டி, பேரீச்சம் பழம், மிட்டாய், சோப்புக்கட்டி, மீன் முதலிய எல்லாச் சாமான்களும் வைத்திருக்கிறார்கள். சிலர் தாங்கள் கொணர்ந்த காய்கறி, வேஷ்டி, பாய் முதலிய சாமான்களை விற்கிறார்கள். சிலர் அரிசி, உப்பு, புளி, மிளகாய், வெல்லம் முதலிய சாமான்களை வாங்குகிறார்கள். சிலர் தாங்கள் கொண்டுவந்த சாமான்களை விற்று, அந்தப் பணத்திலிருந்து தங்களுக்கு வேண்டிய வேறு சாமான்களை வாங்கிக் கொள்கிறார்கள். சிலர் தங்கள் சாமான்களைவேறுசாமான்களுக்குமாற்றிக்கொள்கிறார்கள். உங்களில் சிலர் நெல், அரிசி முதலிய தானியங்களைக் கொடுத்து, வேர்க்கடலை, இலந்தைப் பழம், நாவல்பழம், கருவேப்பிலை, கொத்துமல்லி முதலியன வாங்குவதுண்டல்லவா? இம்மாதிரி, சாமான்களுக்குச் சாமான் மாற்றிக் கொள்வதற்குப் பண்டமாற்றல் என்று பெயர். இம்மாதிரி வியாபாரம் இப்போது அதிகமாக இல்லை. இவ்விதம் ஜனங்கள் தங்களுக்கு வேண்டியசாமான்களைஒரு வாரத்திற்கொருமுறை மொத்தமாக வாங்கிக் கொள்வார்கள். இப்படிவாங்குவதில் சாமான்கள் நல்லதாகவும், மலிவாகவும் இருக்கும்.

நகரங்களில் சில விடங்களில் காய்கறி, பலசரக்கு முதலிய சாமான்களைத் தினந்தோறும் நிரந்தரமாக வைத்துக்கொண்டு வியாபாரஞ் செய்வார்கள். இம்மாதிரி, சாமான்களைக் கொண்டு வந்து வைத்து வியாபாரம் செய்யும் இடத்திற்கு 'மார்க்கெட்டு' என்று பெயர். சாமான்கள் வேண்டுபவர்கள், மார்க்கெட்டுகளில் தங்களுக்கு வேண்டிய சாமான்களை நிச்சயமாகப் பெற்றுக் கொண்டு போவார்கள்.

நீ திருவிழாவிற்குப் போயிருக்கிறாயா? திருவிழாக் காலங்களிலும் பல கடைகள் வந்திருக்கும். அக்கடைகளில் சுற்றுப்புறத்தில் கிடைக்கும் காய்கறி, கரும்பு முதலிய பொருள்களையும், பாத்திரங்கள், விளையாட்டுச் சாமான்கள், புத்தகங்கள், மஞ்சள், குங்குமம், பஞ்சாங்கம் முதலிய பலவிதச் சாமான்களையும் ஜனங்கள் திருவிழாக் காலங்களில் வாங்கி வைத்துக் கொள்வார்கள்.

கேள்விகள்

1. உங்கள் ஊருக்கு அருகிலுள்ள சந்தை எது? அது என்ன கிழமையில் கூடுகின்றது?
2. சந்தை ஏன் கூடுகின்றது?
3. சாமான்களைச் சந்தையில் வாங்குவதில் என்ன அனுகூலம்?
4. சந்தையில் விற்கும் சாமான்களில் சிலவற்றைச் சொல்லு.
5. மார்க்கெட்டு என்றால் என்ன? சந்தைக்கும் மார்க்கெட்டுக்குமுள்ள வித்தியாசம் யாது? உன் ஊரில் மார்க்கெட்டு உண்டா?
6. நீ திருவிழாப் பார்த்திருக்கிறாயா? திருவிழாக் கடையில் உன் வீட்டில் வாங்கிய சாமான்கள் என்ன?

13. தொழிற்சாலைகள்

நமது கிராமங்களில் முக்கால் வாசி ஜனங்கள் பயிர் வேலை செய்து ஜீவனம் செய்கிறார்கள். என்றாலும், இக்காலத்தில் பெரிய இயந்திரங்கள் மூலமாக நடைபெறும் தொழிற்சாலைகள் சிற்சில இடங்களில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் சிலர் வேலை செய்து பிழைக்கிறார்கள்.



உலைக்களத்தில் இரும்பைக் காய்ச்சி அரிவாள், மண்வெட்டி முதலிய இரும்புச் சாமான்களைக் கருமான்கள் செய்வதைப் பார்த்திருப்பீர்கள். ஏர், கலப்பை முதலிய மரச் சாமான்கள் செய்தல், பாய் பின்னுதல், எண்ணெய் ஆட்டுதல், செருப்புத் தைத்தல் முதலிய சில்லறைத் தொழில்களும் ஆங்காங்கு நடைபெறுவது உங்களுக்குத் தெரியும். ஆனால் பெரிய சக்கரங்கள் சுழலும் இயந்திரங்கள் மூலம் பல பொருள்களை ஏராளமாகச் செய்யும் தொழிற்சாலைகளைப் பார்த்திருக்கிறீர்களா?

நெல் ஏராளமாக விளையும் ஜில்லாக்களில் நெல் அரைக்கும் இயந்திரங்கள் ஏற்பட்டு, நெல்லைக் குத்தி அரிசியை வேறூர்களுக்கு அனுப்புகிறார்கள். பருத்தி விளையும் ஜில்லாக்களில் சில ஊர்களில் கொட்டைகளைப் பிரிக்கவும், நூல் நூற்கவும், ஆடைகள் நெய்யவும் மின்சாரத்தினால் ஓடும் இயந்திரங்கள் அமைத்த பெரிய பஞ்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விதப் பஞ்சு ஆலைகளைச் சென்னை, தூத்துக்குடி, மதுரை, கோயமுத்தூர் முதலிய இடங்களில் காணலாம். இரும்பை உருக்கி வார்த்து ரயிலுக்கு வேண்டிய சக்கரங்கள், தண்டவாளங்கள், இருப்புச் சட்டிகள் முதலியன செய்யும் பெரிய இரும்புத் தொழிற்சாலைகள் திருச்சிக்கு அருகிலுள்ள பொன் மலையிலும், சென்னைக்கருகிலுள்ள பெரம்பூரிலும் இருக்கின்றன.

சர்க்கரை செய்யும் கரும்பு ஆலைகளும், பெப்பர்மிண்டு, ஸோப்பு, தீப்பெட்டி, சிமெண்டு முதலியவை செய்யும் தொழிற்சாலைகளும் இக்காலத்தில் சில இடங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன.

உங்கள் ஊருக்கு அருகில் எந்த விதமான தொழிற்சாலை உண்டு? நீ அங்குச் சென்று பார்த்திருக்கிறாயா? பிற ஊர்களிலிருக்கும் பலவிதத் தொழிற்சாலைகளையும், சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுது கண்டு கவனித்து வாருங்கள்.

14. கோயமுத்தூர் ஜில்லாவின் எல்லையும், இயற்கை அமைப்பும்

பிள்ளைகளே ! நாம் வசிக்கும் ஜில்லாவுக்கு கோயமுத்தூர் ஜில்லா என்று பெயர். முதன் முதலில் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது எல்லைகள். எல்லைகள் என்றால் என்ன? ஒரு இடத்தின் நாலா பக்கங்களிலுமுள்ள இடங்களே எல்லைகள் ஆகும்.

இந்த ஜில்லா கொங்கு நாட்டின் ஓர் பாகமாகும்.

எல்லை:—முதல் பக்கத்திற்கு எதிரில் உள்ள வர்ணப்படத்தைப்பாருங்கள். காவேரி நதி வடமேற்கிலிருந்து புறப்பட்டு முதலில் கிழக்கு நோக்கிச் செல்லுகிறது. காவேரி வடக்கிலும் வடகிழக்கிலும் எல்லையாக இருக்கிறது. அதற்கு வடக்கில் உள்ளது மைசூர் இராஜ்ஜியம். காவேரிக்குக் கிழக்கில் இருப்பது சேலம் ஜில்லா. சேலம் ஜில்லா வடகிழக்கிலும் எல்லையாக இருக்கிறது. காவேரி நதி திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் பிரவேசிக்கிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லாவையும் கிழக்கு எல்லையாகச் சொல்லலாம். தெற்கில் மதுரை ஜில்லாவும், திருவாங்கூர் இராஜ்ஜியமும், மேற்கில் கொச்சி இராஜ்ஜியமும், மலையாளம் ஜில்லாவும், மைசூர் இராஜ்ஜியமும் இருக்கின்றன.

நான்கு பக்கங்களிலும் நிலப்பாகம் சூழ்ந்து இருப்பதால், இதை உள்நாட்டு ஜில்லா என்று சொல்லுகிறோம்.

பரப்பு :—நமது ஜில்லா அதிக நீளமான இடத்தில் கிழக்குமேற்கில் 70 மைலும், அதிக அகலமுள்ள இடத்தில் தெற்கு வடக்காக 135 மைலும் இருக்கிறது. ஜில்லாவின் மொத்தப் பரப்பு 7091 சதுர மைல்.

இயற்கை அமைப்பு :—ஜில்லாப் படத்தைப் பாருங்கள். வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் மலைகள் இருக்கின்றன. கிழக்கில் ஒரு பாகத்தில் காவேரி நதி ஓடுகிறது. அது குதிரை லாடம் போன்ற உருவமாகத் தோன்றுகிறது. காவேரி நதி வடக்கிலிருந்து தெற்குநோக்கிப் போவதால் தென்கிழக்குப் பாகம் வடகிழக்குப் பாகத்தைவிடத் தணிவானதென்று தெரிகிறது. நதிகள் மேற்கிலிருந்து கிழக்கில் சென்று காவேரியில் விழுவதால் கிழக்குப் பாகம் மேற்குப் பாகத்தைவிடத் தணிவானதென்று ஊகிக்கிறோம்

வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் உட்பாகத்தில் சரிவு ஏற்பட்டிருந்தாலும், கோயமுத்தூர், பல்லடம், காங்கயம் என்ற ஊர்களின் வழியாக நிலம் சற்று உயர்ந்திருக்கிறது. இதனால் வடக்கில் நொய்யலுக்கும் தெற்கில் அமராவதிக்கும் மத்தியிலுள்ள தரை, வீட்டுக் கூரை போல் நடுவில் மேடாகவும், இருபுறம் சரிந்தும், தண்ணீர் பாய்வதற்குத் தக்கவாறு அமைந்திருக்கிறது.

மிகவும் தணிவான பாகம் ஈரோடு தாலூக்காவின் கிழக்குப் பக்கத்திலும், காவேரி நதிக்கு மேற்குப் பக்கத்திலுமுள்ள நிலப் பரப்பாகும். இது கடல் மட்டத்துக்கு மேல் சுமார் 600 அடி உயரமுள்ள பாகம். தென்மேற்கில் பொள்ளாச்சி தாலூக்காவிலுள்ள ஆனைமலையும், வடக்கில் கோபி, பவானி தாலூக்காக்களிலுள்ள பிளிகிரி ரங்கன் மலையும், 3000 அடிக்குமேல் உயரமானவை. ஆகவே நமது ஜில்லாவைப் பின் குறித்த மூன்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. கோபி, பவானி தாலூக்காக்களின் வடக்குப் பாகம், கொள்ளேகாலம் தாலூக்கா இவைகள் அடங்கிய மலை அல்லது பீடபூமிப் பிரதேசம்,

2. பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டையில் அடங்கிய மலைப் பிரதேசம்.

3. மேற்சொல்லிய இரண்டுமலைப் பிரதேசங்களுக்கும் மத்தியிலுள்ள சமவெளிப் பிரதேசம். இவை கடல் மட்டத்திற்குமேல் சராசரி 900 அடி உயரம் என்று கூறலாம்.

15 மலைகளும் நதிகளும்

நமது ஜில்லாவின் தெற்கிலும், மேற்கிலும், வடக்கிலும் மலைகள் இருக்கின்றன.

1. ஆனைமலை:—இது பொள்ளாச்சி தாலூக்காவின்தெற்குப்பாகத்தில் இருக்கிறது. இதன் உயர்ந்த சிகரத்திற்கு 'ஆனை முடி' என்று பெயர். அதன் உயரம் 8,837 அடி; சுமார் $1\frac{3}{4}$ மைல் உயரம். யானைகள் அதிகம் இருப்பதால் ஆனைமலை என்று பெயர் வந்தது.

2. மேற்குத் தொடர்ச்சி மலை:—பொள்ளாச்சியிலிருந்து கோயமுத்தூருக்குப் போகும்போது மேற்கில் அதிக தூரத்தில் மலைததொடரைக் காணலாம். அது மேற்கு மலைத் தொடரின் ஒரு பாகம். மத்தியில் இடைவெளி இருப்பதையும் பார்க்கலாம். அது மேற்கு மலைத்தொடரில் உள்ள பாலக்காட்டுக் கணவாய். கணவாய்க்கு வடக்கிலுள்ள மலைக்கு நீலகிரி என்று பெயர். இதன் ஒரு பாகம் நமது ஜில்லாவில் இருக்கிறது. அதன் பெயர் ரங்கசாமி மலை. இதற்கு அடுத்தாற்போல் லாம்டன் என்ற குன்று இருக்கிறது. அதன் மேலிருந்து கிழக்கில் பார்த்தால் கோயமுத்தூர் நன்குய்த் தெரியும். வெள்ளியங்கிரி மலையும் மேற்கு மலைத் தொடர்ச்சியின் ஓர் பாகமாகும்.

3. பிளிகிரி ரங்கன் மலை:—பிளிகிரி என்றால் கன்னட பாஷையில் வெள்ளி மலை என்று அர்த்தம். இது கொள்ளேகாலம் தாலூக்காவில் தெற்கு வடக்காக இருக்கிறது. இதிலும் ஆனைமலையில் போலவே யானைகள் இருக்கின்றன. இது மேற்குத் தொடர்ச்சி மலையில் வந்து முடிகிறது. இது கிழக்குத் தொடரில் ஒரு பாகமாகும். இதன் நீளம் சுமார் 40 மைல் இருக்கலாம். மிகவும் உயர்ந்த இரண்டு சிகரங்கள் இங்கு உண்டு. அவைகள் சுமார் ஒருமைல் அல்லது $1\frac{1}{4}$ மைல் உயரம் இருக்கும்.

4. பர்கூர் மலை:—கொள்ளேகாலம், பவானி தாலூக்காக்களுக்கு மத்தியில் அமைந்திருக்கிறது. இம்மலையில் பர்கூர் என்ற ஊர் இருக்கிறது. அதனால்தான் இம்மலைக்கு அந்தப் பெயர். 10 மைல் நீளமும் 15 மைல் அகலமும் உடையது. சிகரங்கள் முக்கால் மைல் உயரமானவை.

நதிகள்:—மலைகளிலிருந்து நதிகள் உற்பத்தியாகிப்பள்ளமான இடத்தை நோக்கி ஓடுகின்றன. காவேரி நதிமுதலில் கொள்ளேகாலத்திலிருந்து கிழக்கிலும், பிறகு தெற்கிலும் ஓடுகிறது. அதிலிருந்து பூமியின் சரிவு எந்தப் பாகத்தில் உள்ளது என்று அறிகிறோம். அதுபோல, பவானி, நொய்யல், அமராவதி நதிகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சென்று காவேரியில் கலக்கின்றன. காவேரி நதியில் சேருவதால் அவைகள் காவேரி நதியின் உப நதிகள்.

நமது ஜில்லாவில் மேற்கு நோக்கி ஓடும் ஆறு ஒன்று உண்டு. அது தான் அலியாறு. குண்டல் நதி வடக்கு நோக்கிப் போய், காவேரியில் கலக்கிறது. இதுவும் காவேரியின் உப நதியாகும்.

காவேரி நதி:—இது மைசூருக்கு மேற்கிலுள்ள குடகு நாட்டில், உற்பத்தியாகிறது. நமது ஜில்லாவின்

ஓரமாக 150 மைல் ஓடுகிறது. இவ்வளவு அதிகத் தூரம் இந்தப் பெரிய நதி ஓடினாலும், இந்த ஜில்லாவில் அதனால் நீர்ப்பாசனம் குறைவு. திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் தான் அதிகமாகப் பிரயோஜனப்படுகிறது. கொஞ்சமேனும் பாய்ச்சல் நடைபெறும் இடங்கள் கொள்ளே காலம் தாலூக்காவில் சொற்ப பாகமும், ஈரோடுக்குத் தெற்கிலுள்ள பாகமுமேயாகும்.



சிவசமுத்திரம் நீர் வீழ்ச்சி

கொள்ளே காலத்திலிருந்து வடமேற்குத் திசையில் 9 மைல் தூரத்தில் காவேரி நதி இரண்டு பிரிவாகப் பிரிந்து மறுபடியும் ஒன்று சேருவதால் மத்தியில் திட்டு அல்லது தீவு உண்டாகியிருக்கிறது. அதற்குச் சிவசமுத்திரம் என்று பெயர். இங்கு காவேரியின் நீர் சுமார் 320 அடி உயரத்திலிருந்து அற்புதமான நீர் வீழ்ச்சியாக விழுகிறது. உலகத்தில் பேர்போன அழகான நீர்வீழ்ச்சிகளில் இது ஒன்று.

பவானி நதி:—இது மலையாளம் ஜில்லாவில் மேற்குத் தொடர்ச்சியில் ஒரு பள்ளத்தாக்கில் உற்பத்தியாகி மேட்டுப்பாளையம், சத்திய மங்கலம் வழியாக ஓடுகிறது. பவானி என்ற ஊரின் கரையில் காவேரி நதியுடன் கலக்கிறது. இந்த இடத்தைப் புண்ணிய தீர்த்தம் என்று கருதுகிறார்கள். பவானி நதியின் நீளம் 105 மைல்.

ஆனிமீ முதல் புரட்டாசி மாதம் வரையில் (மே கடைசி முதல் ஆகஸ்டு முடிய) வீசும் தென்மேற்குப் பருவக் காற்றை நமது ஜில்லாவினுள் வர விடாமல் மேற்குத் தொடர்ச்சி மலை தடுப்பதால், அக்காற்று அம்மலைமீது அதிகமாய் மழையைப் பெய்கிறது. அப்போது பெய்கிற மழைதான் பவானி முதலிய நதிகளில் வெள்ளமாக வரும். பாசனத்துக்கு பவானி நதி மிகவும் உபயோகப்படுகிறது. பெரும்பாலும் சமநில பூமியில் ஓடுவதுதான் அதற்குக் காரணமாகும். இங்கு நெல், கருப்பு அதிகமாக விளைகின்றன. பவானியிலிருந்து இரண்டு பெரிய கால்வாய்கள் பிரிகின்றன. தாடவப்பள்ளிக் கால்வாய் கோபியில் ஓடுகிறது. கலிங்கராயன் கால்வாய் ஈரோடு தாலூக்காவில் ஓடுகிறது.

நொய்யல் நதி:—இது கோயமுத்தூருக்கு மேற்கில் வெள்ளியங்கிரியில் உற்பத்தியாகிறது. கோயமுத்தூரிலிருந்து வெள்ளியங்கிரி மலையை நோக்கிச் சென்றால் குதிரை லாடம் போன்ற வடிவத்தில் மலைத்தொடர் இருப்பது பார்ப்பதற்கு நேர்த்தியாகத் தோன்றும். தெற்கில் ஐயசாமி மலை, மேற்கில் வெள்ளியங்கிரி மலை, வடக்கில் மருதமலை என்றவை உண்டு. நொய்யல் நதிக்கரையில் உள்ள தென்னந்தோப்புக்களும் பாக்குத்தோப்புக்களும் பச்சைப்பசே

லென்று காணப்படுகின்றன. இந்நதி கோயமுத்தூருக்கும், மேற்கில் மலைக்கும் மத்தியிலுள்ள நிலபாகத்தை நன்கு வளம் பெறச் செய்கிறது. நொய்யல் நதியும் அதன் கால்வாய்களும்எவ்வளவுக்கெவ்வளவு இந்தப் பிரதேசத்தில் அவைகளின் சுத்தமான ஜலத்தைப் பாய்ச்சி விடுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு பீதி சுமார் 80 மைல், அதாவது திருப்பூர் வழியாகக் காவேரியில் போய் விழும் வரையில் வறண்டு இருக்கும்படி ஏற்படுகிறது. அதனால் அது செல்லும் இடங்களுக்குப் பக்கத்தில் குளங்கள் வெட்டி ஜலத்தை நிரப்பிக்கொண்டு விவசாயம் செய்கின்றனர். நொய்யலில் ஜலம் அதிகமாய் வரும் காலம் பவானியைப் போலவே தென்மேற்குப் பருவக்காற்றின் காலமாகும்; அதாவது ஆனி முதல் ஆடி, ஆவணி வரையிலாகும்.

நொய்யல் நதி ஒரு புண்ணிய நதியாகக் கருதப்படுகிறது. அது உற்பத்தியாகும் மலையும், அதிலுள்ள கோவிலும் விசேஷமானவை. கோடைக் காலத்தில்அநேகர் அங்கு யாத்திரை செல்லுவார்கள். நொய்யல் நதிக்கரையில் மேலைச்சிதம்பரம் என்ற பேரூர் ஸ்தலம் இருக்கிறது. இவ்விரண்டு ஸ்தலங்களுக்கும் மத்தியில் இந்நதி விசேஷத்தூய்மை பெற்றிருப்பதாக அங்குள்ளோர் கூறுகின்றனர். உதாரணமாக அங்குள்ள சாணம் புழுப்பதில்லை; எலும்புகள் கல் போலாகின்றன. இத்தகைய விசேஷங்களாலும், விவசாயத்துக்கு ஏராளமான நீர்ப்பாசனமாவதாலும் இந்நதி இப்பாகத்தில் பேர் பெற்றிருக்கிறது.

அமராவதி நதி:—இது ஆனை மலையில் உற்பத்தியாகிறது. உடுமலைப் பேட்டை, தாராபுரம் தாலூக்காக்களின் தென்பாகம் வழியாகத் திருச்சிராப்பள்ளி ஜில்லாவுக்குள் சென்று, கடைசியில் காவேரியில்கலக்கிறது. மதுரை ஜில்லாவில் உள்ள பழனி மலையின் வடசாரலில் விழும் மழை ஜல மெல்லாம் இந்நதியில் ஷண்முக நதி மூலமாய் வந்து விழுகிறது. இன்னும் சில காட்டாறுகளும் இதில் விழுந்து ஜலப் பிரவாகத்தை அதிகப்படுத்துகின்றன. அப்படியிருந்தும் அதிக காலம் வறண்டிருக்கும். ஆயினும், ஜூன் முதல் நவம்பர் வரையில் போகும் ஜலம் அதிகமாய் இருப்பதோடு, இந்நதி ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் பாய்ச்சலுக்கு உபயோகப்படுகிறது. ஜலமில்லாத காலத்தில் அதாவது மார்ச்சு முதல் ஜூன் மாதம் வரையில், ஜலத்திற்காக ஓடுகால் தோண்டிக் கொள்ளுகின்றனர்.

காடுகள்:—இந்த ஜில்லாவில் காடுகள் அதிகம். எங்கு மலைகள் இருக்கின்றனவோ அங்குக் காடுகள் விசேஷமாய் இருக்கின்றன.

16. சீதோஷ்ண நிலைமை

சில மாதங்களில் உஷ்ணம் அதிகமாகவும், சில மாதங்களில் குளிர்ச்சி அதிகமாகவும் இருப்பதை உணர்கிறோம். சூரிய வெப்பம் தான் உஷ்ணத்திற்குக் காரணம். காற்றும் மழையும் இல்லாவிட்டால் உஷ்ணம் சகிக்க முடிவதில்லை. ஆகையால் காற்றும் மழையும் அதிகமாகக் கிடைக்கும் இடங்களிலும், காலங்களிலும் உஷ்ணம் குறைவாயும், சௌகரியமாயும் இருக்கும்.

கடல் முதலிய நீர் நிலைகளிலிருந்து ஜலம் உஷ்ணத்தால் ஆவியாகிறது. காற்றினால் அது மேகமாகச் சஞ்சரித்துக் குளிர்ந்த காற்றுபட்டபோது மழையாகப் பெய்கிறது. மழை பெய்யும்போது குளிர்ச்சியாயிருக்கும்; போர்த்திக்கொள்ளவேண்டி

ஸ்கேல்: 1 அங். = 16 மைல்


கோயமுத்தூர்ஜில்லா
காற்றும்-மழையும்
காவேரி
காவேரி
பாலக்காட்டுக்கணவாய்
திருவாங்கூர்
மழை
35" க்குமேல்
30" முதல் 35" வரை
25" முதல் 30" வரை
20" முதல் 25" வரை

யிருக்கும். சிலர் சட்டை அல்லது கம்பளி போட்டுக் கொள்ளுவார்கள்.

நீராவி நில மட்டத்தின் சமீபத்திலேயே குளிர்ந்து விட்டால் பனியாகி விடுகிறது. பனி பெய்யும்போது மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். சிலருக்கு நடுக்கல் உண்டாகும். கைகள் விரைத்து நன்ருய் நீட்டி மடக்கவும், வஸ்துக்களை எடுக்கவும் முடியாமல் கஷ்டப்பட நேரிடும்.

உயரமான இடங்களில் குளிர்ச்சியும், தாழ்வான இடங்களில் உஷ்ணமும் அதிகம். வால்பாறை போன்ற உயரமான இடத்தில் குளிராக இருப்பதையும், அங்கிருப்பவர்கள் கம்பளிச்சட்டை, கம்பளிப் போர்வை முதலியன உபயோகிப்பதையும் பார்க்கிரேம். உயரம் கம்மியான தாராபுரம் போன்ற இடங்களில் உஷ்ணம் அதிகமாக இருக்கிறது; சட்டை, போர்வை ஒன்றும் உபயோகிக்கிறதில்லை. வெயில் காங்கை அதிகமென்று எல்லோரும் முறையிடுகின்றனர்.

பருவக் காற்றுகள் :— நம் ஜில்லாவுக்கு மட்டுமல்ல, எல்லா ஜில்லாக்களுக்கும் இரண்டு பருவக் காற்றுகள் உண்டு. தென் மேற்கிலிருந்து அடிக்கும் காற்று ஒன்று. இது மேற்கில் அரபிக்கடலிலிருந்து வருகிறது. வடகிழக்கிலிருந்து அடிக்கும் காற்று மற்ருென்று. இது வங்காளக் குடாக்கடலிலிருந்து வருகிறது.

இவ்விரு பருவக் காற்றுகளினுலும் நமது ஜில்லாவுக்கு அதிகப் பலனில்லை என்று முன்னமேயே கவனித்தோம். தென்மேற்கிலிருந்து வரும் காற்றை மலை தடுத்து விடுகிறது. நமது ஜில்லாவில் பெய்வதைவிடச் சுமார் 4½ மடங்கு அதிகமான மழையை, மலையாளத்திலேயே பெய்து விடுகிறது. வடகிழக்கிலிருந்து வரும் காற்று இங்கு வர அதிகத் தூரம் இருப்பதால், வரும் வழியிலேயே மழையைப் பொழிந்து விடுகிறது. ஆயினும், தென்மேற்குக் காற்றைவிட இக்காற்று சுமார் 1½ மடங்கு அதிகமாய் நமக்கு மழை கொடுக்கிறது. தென் மேற்கிலிருந்து கொஞ்சம் மழை கிடைப்பது பாலக் காட்டுக் கணவாயினுல் என்பதை முன்னமேயே கவனித்திருக்கிரேம். தென்மேற்குப் பருவக்காற்று ஜூன் முதல் அக்டோபர் வரையிலும், வடகிழக்குப் பருவக்காற்று அக்டோபர் மத்தியிலிருந்து டிசம்பர் மத்தி வரையிலும் அடிக்கின்றன.

மழை சம்பந்தமாக மேற்கண்ட இரு பருவகாலங்கள் தவிர, டிசம்பர் மத்தியிலிருந்து பிப்ரவரி முடியக் குளிர் காலமும், மார்சு முதல் மே முடிய உஷ்ணகாலமும் உண்டு. இந்த உஷ்ண காலத்திலும் மழையுண்டு. அதற்குக் கார் மழை அல்லது கொங்கு மழை என்று சொலலுகிரேம்.

மற்ற ஜில்லாக்களை விட மழையின் அளவு குறைவாய் இருந்தாலும், பாலக்காட்டுக் கணவாயின் உதவியால் அரபிக்கடல் காற்றும் ஜில்லாவினுள் பிரவேசித்து, கொல்லன் துருத்தியால் காற்று ஊதுவது போல் வேகமாய் அடிக்கிறது. அந்தக் குளிர்ந்த காற்றினுல் தான் ஜில்லாவின் தென் பாகத்தில், முக்கியமாய் கோயமுத்தூர், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை தாலூக்காக்களில் உஷ்ணம் குறைவுபடுகிறது; வசிப்பதற்கும் ஆரோக்கியமாய் இருக்கிறது.

வால்பாறை, கொள்ளேகாலம் போன்ற உயரமான இடங்களில் மழை அதிகம்; உஷ்ணம் மிகவும் குறைவு. ஆயினும் மழைக்குப் பிறகு

மலைக்காய்ச்சல் உண்டாவதால் அங்கு ஜனங்கள் அதிகமாய் வசிப்பதில்லை.

மழை மிகவும் குறைவான பிரதேசம் தாராபுரம். பல்லடமும் அவ்வித மென்றே கூறலாம். இத்தாலூக்காக்களில் வடகிழக்கு மழை கிடைத்தாலும், காலா காலத்தில் கிடைப்பதில்லையாதலால் விவசாயத்துக்குப் பயன்படுவதில்லை. மழை அதிகமாகவுள்ள இடத்தில் பயிர் செய்ய முடியாத மலையாக இருப்பதும், நில வளப்பமுள்ள சமவெளியில் மழைக் குறைவாக இருப்பதும் நமது ஜில்லாவின் துர்ப்பாக்கியமே ஆகும்.

17. விவசாயமும் விளைபொருள்களும்

மற்ற ஜில்லாக்களை விட மழைக் குறைவாய் இருப்பதைப்பற்றி முன்னமேயே கவனித்தோம். மழைக் குறைவாய் இருப்பதோடும், மழை எல்லாப்பாகங்களிலும்சமமாகப்பெய்வதில்லை. மலைகளிலும்மலையடிவாரங்களிலும் மலைஜுரம் பீடிப்பதால், மழைஅதிகமுள்ள கொள்ளேகாலம், பொள்ளாச்சி, பவானி மலைப் பிரதேசங்களில் பெய்யும் மழையினால் அதிகப்பலன் ஏற்படுவதில்லை. இவ்வித இயற்கைவசதி இல்லாமல்இருந்தும் வளமுள்ள ஜில்லாஎன்று பெயர் பெற்றதற்கு மனிதன் உழைப்பே காரணம் ஆகும். நமது ஜில்லாவிலுள்ள உழவர்களின் ஊக்கத்தையும், விடாமுயற்சியையும், பொறுமையையும், சாமர்த்தியத்தையும் பற்றிப் பெரியோர் பலவாறாகப் புகழ்ந்துள்ளனர். 'பொருள்மட்டும் இருந்தால் அவர்கள் நிலம், பருவம் இவைகளை வெல்வதில் சந்தேகமில்லை, என்றும், 'விவசாயத்தில், ஏர் உழுவதிலிருந்து அறுவடை செய்யும்வரைக்கும் கவனித்தால் சிறந்த உழவின் நுணுக்கமான பல விவரங்களையும் பக்குவமாய்க் கவனிப்பார்' என்றும் நிக்கல்சன் துரை என்ற பெரியார் புகழ்ந்திருக்கின்றனர். புன்செய் நிலத்தைவிட நன்செய் நிலத்தில் பயிர் செய்வதில் அதிகத் தேர்ச்சி பெற்றவர்கள். ஆயினும் பருத்தி விளையும் நிலங்களிலும், மற்றும் உயர் தரப் புன்செய் நிலங்களிலும் பயிர் செய்தல் நன்கு கவனிக்கப்படுகிறது. கொங்கு வேளாளர், கம்மவார் இவ்விரு வகுப்பினரும் விவசாயத்தில் பெரும்பாலும் ஈடுபட்டவர்கள்.

நிலத்தின் தரம்:—நிலத்தின் மேற்பரப்பில் கொஞ்ச ஆழம் வரையில் தான் மண் இருக்கிறது. அதன் கீழ் பாறை இருக்கிறது. ஆயினும் மண்ணைப் பரீட்சித்த வரையிலும் பொதுவில் சத்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. செம்மண்ணும் கப்பியும் தானியப் பயிருக்கு ஏற்றவையல்ல. ஆயினும் சிவப்பு, கறுப்புக் களிமண் உள்ள பிரதேசங்களில் பிரயாசையால் நல்ல பலன் ஏற்படுகிறது. புன்செயில் சாகுபடி கம்மி. கறுப்புக் களிமண் (கரிசல்) நிலத்தில் பலவிதமான அறுவடை கிடைக்கும். ஆற்றுப் பாய்ச்சலுள்ள சிவந்த களிமண் பூமியும், கரிசல் பூமியும் அதிகப் பயன் கொடுக்கும்.

கோயமுத்தூர், பல்லடம், உடுமலைப்பேட்டைதாலூக்காக்கள்கரிசல் நிலமுள்ளபூமி. இங்கு பருத்திநன்கு வளரும். இப்பாகம் ஜில்லாவிலேயே மிகச் சிறந்ததாகும். கோபிசெட்டிபாளையம்தாலூக்காவும்பொள்ளாச்சியில் ஒரு பாகமும் செந்நிறக் களிமண் உள்ளவை. இவை இரண்டாந் தரமாகக் கூறலாம். தான்யம் அதிகமாக விளைகிறது. பவானி, தாராபுரம், அவிநாசி தாலூக்காக்கள் கற்கள் கலந்த செம்மண் அதிகமாய்க் கொண்டவை. இவ்விடங்களில் செழுமை குறைவு.

பாசனம்:—பாசன வகைகளில் சிறந்ததும், ஏற்றதும் வாய்க்கால் பாசனமே. அதற்குப்பின் கிணற்றுப் பாசனம். அதற்கும் கடைத் தரமானது வானம் (மழை) நோக்கிப் பயிரிடுவதாகும். இந்த ஜில்லாவில் மேற்கூறிய பாசன வகைகள் மூன்றினுலும், பயிரிடப்படும் விஸ்தீரணம் சுமார் 44 ஆயிரம் ஏகர். இங்கு மழை எதிர்பார்த்துப் பயிர் செய்யும் நில விஸ்தீரணம் 143 ஆயிரம் ஏகர் இருப்பதால், சுமார் கால் பாகம் நீர்ப்பாசனத்தாலும் முக்கால் பாகம் வான மாரியாலும் பயிர் செய்யப்படுவதாகக் கொள்ளலாம்.

நமது ஜில்லாவில் 86,000 கிணறுகள் உண்டு. ஒரு கிணற்றினுல் சராசரி 5 ஏக்கர் சாகுபடி ஆகிறது. காவேரி நதியினுல் நமது ஜில்லாவுக்கு அதிகப் பிரயோஜனம் இல்லை. ஆனுல் மற்ற நதிகளினுல் அதிக நன்மையுண்டு. நதிகளில் வாய்க்கால் மூலமாகவும், சில விடங்களில் அணைகட்டித் தண்ணீர் தேக்கி அதிலிருந்து கால்வாய் மூலமாயும் தேவையான இடத்திற்குத் தண்ணீரைத் திருப்பிக் கொண்டுபோய் விவசாயம் செய்கிறுர்கள். பவானி நதியில் இரண்டு அணைக்கட்டுகள் உண்டு. ஒன்று கோபிசெட்டிபாளையத்தில் கொடிவேரி என்னும் இடத்தில் இருக்கிறது. மற்ருென்று பவானிக்குச் சமீபத்தில் இருக்கிறது. இவ்விரண்டு அணைக்கட்டுகளிலிருந்தும் பாயும் நீரால் 32 ஆயிரம் ஏகர் பயிர் செய்யப்படுகிறது. அமராவதியினுதவியால் உடுமலைப்பேட்டையில் பாதியும், தாராபுரம் தாலுக்காவில் பாதியுமாக மொத்தம் 22 ஆயிரம் ஏகர் சாகுபடி ஆகிறது. கோயமுத்தூர் தாலுக்காவின் மேற்குப்பாகத்தில் நொய்யல் நதியினுல் 6 ஆயிரம் ஏகர் சாகுபடி ஆகிறது. அதில் 4 ஆயிரம் ஏகர் 7 மைல் நீளமுள்ள சித்திரச் சாவடிக் கால்வாயினுல் மட்டும் பாய்ச்சப்படுகிறது. காவேரியினுல் ஈரோடு தாலுக்காவின் தென் பாகத்தில் கொஞ்சம் பயிர் செய்யப்படுகிறது.

ஏரிகளும் குளங்களும் விசேஷமாகவுள்ள பவானி, உடுமலைப்பேட்டை, கோயமுத்தூர், கொள்ளேகாலம் இத்தாலுக்காக்களில் மொத்தத்தில் 19 ஆயிரம் ஏகர் அவற்றுல் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பாகத்தில் 120 குளங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பவானியில் உள்ளவைகளுக்கு ஆப்பக் கூடல் குளங்கள் என்றும், உடுமலைப் பேட்டையில் உள்ளவைகளுக்குத் தனிக் குளங்கள் என்றும் பெயர்.

தாவரம், விளைபொருள்கள்:—நமது ஜில்லாவில் சுமார் மூன்றில் ஒரு பாகம் காடு அடர்ந்திருக்கிறது. அதிக பாகம் ஜில்லாவின் எல்லையோரமாக இருக்கிறது. வடக்கு டிவிஷன் காட்டில் பவானி நதியும், தெற்கு டிவிஷன் காட்டில் அமராவதி நதியும் பாய்கின்றன. மழை பொழிந்து நதியில் பிரவாகம் வருவதற்கு அடர்ந்த காடு தேவையாகும். ஆனுல் போளுவாம்பட்டிப் பள்ளத்தாக்கில் உள்ள காடு கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைக்கப்பட்டு வருகிறது. அக்காரணத்தாலேயே சமீப காலத்தில் நொய்யலின் உபநதிகள் அநேகமாய் வற்றியிருப்பதாகக் குறை இருந்து வருகிறது.

வடக்கு, மேற்கு, தெற்கு இப்பாகங்களில் மலை அதிகமென்று முன்னமேயே கவனித்தோம். இங்குதான் காடுகள் அதிகம். முக்கியமாய் வடக்கிலும், தென்மேற்கிலும் காடுகள் மிகவும் அதிகம். வடக்கிலுள்ள காடுகளில் தேக்கு மரங்கள், சந்தன மரங்கள் உண்டாகின்றன,

ஸ்கேல் : 1 அங்.=16 மைல்


கோயமுத்தூர்ஜில்லா
விளைபொருள்கள்
பட்டுப்பூச்சி
கேழ்வரகு
சந்தனமரம்
தேக்குமரம்
காவேரி
பர்கூர்மாடு
வெற்றிலை
புகையிலை
நெல்
சோளம்
கம்பு
பருத்தி
எள்ளு
காங்கேயமாடு
நிலக்கடலை
கரும்பு
தேயிலை
காப்பி
திருவாங்கூர்
நீலகிரி
மதுரை

புல் அதிகமாய் வளருவதால் கால் நடைகள் மேய்வதற்குச் சௌகரிய மாய் இருக்கிறது. தென்மேற்கில் ஆனைமலைக் காட்டிலும் தேக்கு மரம் அதிகம். ஏலக்காய்ச்செடியும் வளருகிறது. மேற்கிலுள்ள காடுகளில் தேக்கு, கருங்காலி, வேங்கை முதலிய விலை பெற்ற மரங்கள் உண்டாகின்றன. இவைகள் வீடு கட்டவும், மேஜை, நாற்காலி செய்யவும் உபயோகப்படுகின்றன. காட்டுப் பிரதேசங்களில் கிடைப்பவை: தேன், தேன்மெழுகு, கொம்பரக்கு, சீயக்காய், கடுக்காய், பூவந்திக்கொட்டை, ஆவாரம் பட்டை, இன்னும் சில தினுசுப் பட்டைகள் முதலியவையாம். தாராபுரம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை தாலூக்காக்கள் அடங்கிய தென் கோவைக் காட்டு டிவிஷனில் கிடைக்கும்சர்க்கார்வரிசுமார்4 லக்ஷம் ரூபாய். கொள்ளேகாலம் டிவிஷனில் கிடைப்பது சுமார் ரூ. 2 லக்ஷம். கோபி, பவானி தாலுக்காக்கள் அடங்கிய வட கோவைக் காட்டு டிவிஷனிலும், கோயமுத்தூர் தாலூக்கா அடங்கிய பாலக்காட்டுக் காட்டு டிவிஷனிலும் சேர்ந்து கிடைப்பது சுமார் ஒரு லக்ஷம் ரூபாய்.

தானியங்கள்:—கோயமுத்தூர் ஜில்லாவில் அநேக விதமான பயிர்கள் உண்டாவதால் ராஜதானியிலே பிரசித்திபெற்றிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் சில பயிர்களின் தரமும் மற்ற ஜில்லாக்களில் உள்ளதைவிட மேலானதாக இருந்து வருகிறது. ஆயினும் நெல் பயிராவது மிகவும் குறைவு. நிலமும், சீதோஷ்ணமும் நெல் பயிருக்கு ஏற்றதல்ல. விவசாயிகள் இதை நன்கு உணர்ந்திருக்கின்றனர். நெல் பயிராகும் விஸ்தீரணத்தைவிட நான்கு பங்கு அதிகமாகச் சோளமும், 3½ பங்கு கம்பும், 1½ பங்கு ராகியும் விளைகின்றன. மற்ற ஜில்லாக்களைவிட அதிகமாய் விளையும் பயிர் கம்புதான். கரிசல் நிலத்தில், அதாவது கோயமுத்தூர், பல்லடம், தாராபுரம், ஈரோடு, உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி தாலூக்காக்களில் மாறி மாறித் தொடர்ந்து பெரும்பாலும் சாகுபடி செய்யப்படும் பயிர் (Rotation Crop) சோளம். மேலும், தானியம் மனிதருக்கும், தட்டை கால் நடைகளுக்கும் உணவாக விசேஷமாய்ப் பயன்படுகிறது. புன்செய்த் தானியங்கள் அரிசியை விடப் புஷ்டி தருவனவாம். அவை குடியானவர்கள் உணவில் தாராளமாய்ச் சேருவதால் அவர்கள் தேக வலுவுள்ளவரா யிருக்கின்றனர். கொஞ்ச காலமாக மிஷினில் தீட்டிய அரிசியை உபயோகிக்க ஆரம்பித்திருக்கின்றனர். இது சுகத்துக்கு ஏற்றதல்ல.

தோட்டக்கால் பயிர்:—மிளகாய் விளைச்சலில், தமிழ் ஜில்லாக்களில் திருநெல்வேலி, ராமநாதபுரம் தவிர மற்றவை நம் ஜில்லாவுக்குப் பின்னிட்டவையே. சுமார் 12 ஆயிரம் ஏகரில் பயிராகிறது. கோபி, பவானி, ஈரோடில் அதிகமாக விளைந்து, ஈரோடுக்கு மொத்தமாய் வந்து சேருகிறது. புகையிலையினாலும் லாபம் கிடைக்கிறது. சோளத்துக்கு அடுத்த படி விஸ்தீரணத்தில் புகையிலைதான் அதிகம். மிளகாயும், புகையிலையும் உப்புத் தண்ணீரில் நன்றாய் விளைவதாகச் சொல்லப்படுகிறது. கிணற்றுத் தண்ணீர் ஒழுங்காய்ப் பாய்ச்சுவதும் அவை நன்கு பயிராவதற்குக் காரணமாகும். புகையிலை நம் ஜில்லாவில் பயிரானாலும் பதம்செய்வது அடுத்த ஜில்லாவில் நடந்து வருகிறது.

மிளகாய், புகையிலை இவைகளில் பெறும் லாபத்தைவிட அதிக லாபம் கொடுப்பது பருத்தியும், நிலக் கடலையுமாகும். முதல்தரமான கரிசல்

நிலமுள்ள பல்லடம், உடுமலைப் பேட்டை, ஈரோடு, கோயமுத்தூர் தாலூக்காக்களில் பருத்தி ஏராளமாய் விளைகிறது. இப்பருத்தியும் உலகத்திலேயே பேர்போன தரமுள்ளது. கம்போடியாப் பருத்தி 30 வருஷமாகத்தான் இங்கு பயிர் செய்யப்படுகிறது. அது உயர்தரத் துணி நெய்ய உபயோகப்படுவதால் பிரசித்தி பெற்றிருக்கிறது. பருத்தி விளையும் பிரதேசங்களுக்கு மத்தியில் திருப்பூர் அமைந்திருப்பதைப் படத்தில் கவனி. பம்பாய்க்கு அடுத்ததென்று சொல்லும்படி அவ்வளவு ஏராளமான பருத்தி வியாபாரம் இவ்வூரில் நடைபெறுகிறது. பருத்தி கடைதல், பிரித்தல், நூற்றல், நெய்தல் இவை நடைபெறும் யந்திரசாலைகள் அதிகம். திருப்பூர், கோவை முதலிய பலவிடங்களிலும் விவசாயத்தின் பலன் அதிகம் கிடைக்காத ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கு இப் பஞ்சாலைகள் வேலைகொடுத்து வருகின்றன.

நிலக்கடலை விளையும் பாகம் சற்றுக் குறைவானாலும், முதல் தரமான கடலை இங்கு கிடைக்கிறது. பொள்ளாச்சியில் விளையும் நிலக்கடலையை அதிக விலைகொடுத்து வாங்குகின்றனர்.

முன் கூறியவைகளைவிடக் கரும்பு குறைவாகப் பயிரானாலும், நம் ஜில்லாவில் அதிகமாய் விருத்தியடைய இடமுண்டு. இதைப் பயிர் செய்வதில் செலவு அதிகம். வெல்லம் காய்ச்சுவதற்கும், அதை விற்பனை செய்வதற்கும் வசதி குறைவு. இக் குறைகளை நிவர்த்தி செய்தால் அதிக லாபம் உண்டாகும்.

தோட்டங்களில் கம்போடியா பருத்தி, கரும்பு, வாழை, மிளகாய், புகையிலை, வெற்றிலை, மஞ்சள், வெங்காயம், கொத்துமல்லி, உருளைக்கிழங்கு, கத்தரி, வெண்டை, ஆமணக்கு முதலியன அதிகமாகவும், தென்னை, கமுகு, பழமரங்கள் கொஞ்சமாகவும் பயிர் செய்யப்படுகின்றன.

கொள்ளேகாலம் தாலுக்காவில் முசுக்கட்டைச் செடி வளருவதால் பட்டுப்பூச்சி வளர்ந்து அதிலிருந்து பட்டு எடுக்க முடிகிறது. ஆனைமலையில் காப்பிக்கொட்டை, தேயிலை பயிராகின்றன.

நமது ஜில்லாவில் பலவிதப் பயிர்கள் சாகுபடி யாவதால், விவசாயிகளுக்கு அநேகமாய் வருஷம் முழுவதும் வேலை இருந்து வருகிறது. தோட்டத்திலேயே குடியிருந்து ஏர் உழுதல், எரு விடுதல், களை கட்டல், நீர் பாய்ச்சல், காவல் செய்தல் என்ற முக்கியமான ஐந்து வேலைகளையும் சிரத்தையுடன் கவனித்து வருவது அவர்களின் பெருமையைக் காட்டுகிறது.

தாதுப் பொருள்கள் :—நமது ஜில்லாவில் பூமியிலிருந்து எடுக்கப்படும் தாதுப்பொருள் சொற்பம். இரும்பு கலந்த ஒருவகை மண் பவானி, கோபிசெட்டிபாளையம் தாலுக்காக்களில் கிடைக்கிறது. சிலவிடங்களில் வெடியுப்பு கலந்தமண் இருக்கிறது. அதைக் காய்ச்சி வெடியுப்பு செய்கிறார்கள்.

மிருகங்கள் :—இந்த ஜில்லா மாடுகளுக்குப் பேர் போனது. தென் இந்தியாவில் பல பாகங்களுக்கும் வண்டிமாடுகள் இங்கிருந்து வாங்கி அனுப்பப்படுகின்றன. முக்கியமாக ஆலம்பாடி, காங்கயம், பர்கூர் என்று மூன்று ஜாதி மாடுகள் உண்டு.

ஆலம்பாடி ஜாதி மாடுகளைச் சாதாரணமாக மலை நாட்டு மாடுகள் என்று சொல்லுவது வழக்கம். அவை கொள்ளேகாலம், பவானி, கோபி தாலூக்காக்களில் அதிகமாய்க்காணப் படுகின்றன. இவை பாரம் இழுக்க உபயோகப்படும்; ஆனால் ஓட்டத்

திற்கு ஏற்றவையல்ல. மலைகளன்றி சமவெளிப் பிரதேசத்தில் காங்கய ஜாதி மாடுகளைப் போல் அவ்வளவு சளைக்காமல் கடின வேலை செய்வதில்லை. காங்கயஜாதிமாடுகள் தெற்கு, தென் கிழக்குத் தாலூக்காக்களில் அதிகம். அவைகளில் இருவகை உண்டு. ஒன்று பெரியதும், மற்றொன்று சிறியதுமாகும். சிறிய மாடுகள் தாராபுரம், உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி, பல்லடம், ஈரோடு தாலூக்காக்களில் கிடைக்கும். பெரிய மாடுகள் ஜில்லாவின் தென் கிழக்கு எல்லைக்கடுத்த பிரதேசத்தில் கிடைக்கும்.

காங்கய ஜாதி மாடுகள் முக்கியமாய்ப் பராமரிக்கப்படும் இடம் தாராபுரம் தாலூக்காவிலுள்ள காங்கயம் பிர்க்கா என்று சொல்லலாம். அங்கே மாடுகளைப்போஷிக்க விசேஷ வசதி இருக்கிறது. மழை குறைவாயிருப்பினும், அதன் ஈரத்தை அதிகக் காலம் தாங்கிக்கொண்டிருக்கத் தக்க நிலம் இருக்கிறது. அந்த நிலத்தில் கப்பிகலந்த சிவப்புக் களிமண் உண்டு. அதை ஓடைஜல்லிஎன்றும் கூறுவார்கள். இவ்விதக் காரணங்களால் "கொழுக்கட்டைப் புல்" அதிகமாய் வளரவும், மாடுகளை மேய்த்துப் போஷிக்கவும் வசதியுண்டு. சிறிய மாடுகளும், குதிரைகளும் பழைய கோட்டை பட்டக்காரர் என்ற பெரியோரால் அதிக ஜாக்கிரதையுடன் முறைப்படி பராமரிக்கப்படுகின்றன. அவை பெரும்பாலும் வெண்மையாயும், நடுத்தரமாயும் இருக்கும். பெரிய மாடுகளுக்குக் கொம்பு நீளமாய் இருப்பதுடன் வெளிப்பக்கமாய் வளைந்து நுனியில் சற்று வளைந்திருக்கும். காங்கய மாடுகள் பொதுவாகச் சிறியதும், உறுதியுமான பாதங்களையும் நீண்ட வாலையும் உடையவை. காங்கயம் பசுக்கள் அதிகப் பால் கொடுக்கும். அவைகளும் தோட்ட வேலைக்கு உபயோகப்படுகின்றன. பொலி காளைகளை முறைப்படி பாதுகாத்து உபயோகிப்பதில் போதிய கவனம் செலுத்தப்படுகிறது. நமது வைஸ்ராய் லின்லித்கோ பிரபு விவசாயஅபிவிருத்திக்கு உயர்ந்த ஜாதிப் பொலி காளைகள் முக்கியம் என்று சொல்லி, சில காளைகளையும் தானஞ் செய்திருக்கிறார். அதைப் பெரியோர்கள் பின்பற்றும்படியும் கூறியிருக்கிறார். பர்கூர் ஜாதி மாடுகள் பவானிக்கு வடக்குப் பக்கத்தில் போஷிக்கப்படுகின்றன. ஆனால் அவைகளைமுறைப்படி பராமரிப்பவர் யாருமில்லை. சிலர் 25 முதல் 30 மாடுகள் வரை வைத்திருக்கின்றனர். ஜில்லா போர்டு ஆதீனத்தில் சில பொலி காளைகள் வளர்க்கப்படுகின்றன.

நமது ஜில்லாவில் விவசாய நிலைமை இடத்துக்கு இடம் வித்தியாசமாய் இருப்பதைப் பார்க்கிறோம். கரிசல் நிலத்தில் உழுவதற்குக் கனமான மாடுகள்தேவை. சிவந்த மிருதுவான நிலத்தில் உழுவதற்கு வலுவும் சுறுசுறுப்புமுள்ள கால் நடைகள் தேவை. கிணற்றிலிருந்து தண்ணீர், கவலை ஏற்றம் மூலம் இறைப்பதற்கு நடுத்தரமான பலமுள்ள மாடுகள் வேண்டும். இவ்வாறு பலவித உபயோகங்களுக்குத் தகுந்த பலவித மாடுகளும் இந்த ஜில்லாவில் உண்டு.

மாட்டுச் சந்தைகள் நமது ஜில்லாவில் அதிகம். முக்கியமானவை: திருப்பூர், புளியம்பட்டி, பொள்ளாச்சி முதலியன. தாராபுரம், பல்லடம், ஈரோடு தாலூக்காக்களில் செம்மறி ஆடு, குறும்பாடு வளர்க்கின்றனர். அடர்ந்த காடுகளில் யானை, புலி, மான், காட்டு எருமை முதலிய காட்டு மிருகங்கள் வாழ்கின்றன.

18. கைத்தொழிலும் வியாபாரமும்

பயிர்த்தொழில் செய்வதும், ஆடுமாடுகளை வளர்ப்பதும் நமது ஜில்லாவிலுள்ளவர்களின் முக்கிய கைத்தொழில்கள் என்று அறிந்தோம். பூமியிலிருந்து கிடைக்கும் பொருள்களைக் கொண்டு செய்பொருள்கள் செய்கின்றனர். அவ்விதம் செய்வதை முக்கியமாய்க் கைத்தொழில் என்று சொல்லுகிறோம். அவ்வாறு செய்யப்படும் கைத்தொழில்களில் முக்கியமானவை



காளேச்வர் மில்ஸ், கோயமுத்தூர்

பருத்தி நெசவு, பட்டு நெசவு, தோல் பதனிடுதல், உலோக வேலை, தச்சு வேலை, பனைவெல்லம் செய்தல், காப்பிக்கொட்டை சுத்தி செய்தல், கூடை முடைதல், நார் உரித்தல் முதலியன.

பருத்திநெசவு:—பருத்தியைக் கடைந்து, பஞ்சு வேறு, கொட்டைவேறாக எடுப்பதற்கும், கடைந்த பஞ்சிலிருந்து நூல் நூற்பதற்கும் தற்காலத்தில் யந்திரங்களை உபயோகிக்கின்றனர். ஆதிகாலத்திலிருந்து கையினால் நூற்பதும் பழக்கத்திலிருந்து வருகிறது. பல்லடம், அவிநாசி, தாராபுரம் இத் தாலூக்காக்களில் இது நடைபெறுகிறது. ராட்டினத்தில் நூற்ற நூலிலிருந்து கதர்த்துணி நெய்யப்படும். இதற்கு முக்கிய இடங்கள் திருப்பூர், காங்கயம் புளியம்பட்டி (கோபி தாலூக்கா).

செங்குந்தர், தேவாங்கர், அவிநாசி தாலூக்காவில் சில கத்தோலிக் கிறிஸ்தவர்கள்,-இவர்கள் பரம்பரையாக நெசவுத் தொழில் செய்து வருகிறார்கள். கோயமுத்தூரிலும் சத்திய மங்கலத்திலும் உருமால் அங்கவஸ்திரம் நெய்து பம்பாய் முதலிய இடங்களுக்கு அனுப்புகின்றனர். நெசவு நடக்கும் இடங்களில் சென்னிமலை, கோவை, கொள்ளேகாலம், குண்டடம், பவானி, சிவகிரி, முக்கியமானவை. துணியோரத்தில் அச்சுப்போடும் வேலை சென்னிமலையில் நடைபெறுகிற்து. பவானியில் ஜமுக்காளம் நெய்யப்படுகிறது.

பட்டுநெசவு:—பட்டுவேஷ்டிகளும், பட்டுப்புடவைகளும் கொள்ளேகாலத்தில் நெய்யப்படுகின்றன. கைத்தொழில் இலாகா அதிகாரிகள் பட்டு நூல் எடுப்பதற்கு உதவி செய்கிறார்கள். கலங்கல், பஸ்திபுரம், கொள்ளேகாலம் என்ற இடங்களில் கம்பளியும் நெய்யப்படுகிறது.

தோல் பதனிடுதல்:—கோவை, மேட்டுப்பாளையம் இவ்விடங்களில் தோல்பதனிடுதல் நடைபெறுகிறது. கோயமுத்தூர்—மேட்டுப்பாளையம் ரோட்டில் சில மகமதியர்கள் தோல் வியாபாரம் செய்கிறார்கள்.

உலோக வேலை:—திருப்பூருக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள அனுப்பர்பாளையத்தில் பித்தளை, வெண்கலம், மூறி பாத்திரங்கள் செய்து மற்ற ஜில்லாக்களுக்கு அனுப்புகின்றனர். உடுமலைப்பேட்டையில் இரும்புக் கட்டில் செய்யப்படுகிறது.

தச்சு வேலை:—கலப்பை போன்ற உழவுக் கருவிகள், செக்கு, ஜன்னல், கதவு முதலியவை செய்யப்படுகின்றன. மலையாளத்திலிருந்து வரும்

தச்சர், கட்டடத்திற்கும் கோச்சு வண்டிக்கும் வேண்டிய மரவேலை செய்கின்றனர். தச்சுவேலை கற்பிக்கும் ஒரு தொழிற்சாலை கோயமுத்தூரில் இருக்கிறது. சாதாரண வண்டி செய்வதற்குத் தாராபுரம் பேர்போனது.

பனைவெல்லம் செய்தல் :— தாராபுரத்தில் காங்காயத்திற்குப் பக்கத்திலுள்ள இடங்களில் பனைமரங்கள் அதிகம். பனைமரங்களிலிருந்து சாறு எடுத்துக் காய்ச்சிப் பனை வெல்லம் செய்கிறார்கள். கோபி, அவிநாசி, ஈரோடிலும் இது சொற்பமாய் நடைபெறுகிறது. கோயமுத்தூரில் தென்னஞ்சாற்றிலிருந்து வெல்லம் காய்ச்சுகின்றனர்.

காப்பிக்கோட்டை சுத்திசெய்தல் :— நீலகிரிக் காப்பி, மேட்டுப்பாளையம் அல்லது கோயமுத்தூரிலும், ஆனைமலைக்காப்பி கோயமுத்தூரிலும் சுத்தி செய்யப்படுகிறது. கொட்டையைச் சுத்திசெய்து வறுத்துப் பொடியாக்கி டப்பிகளில் பல இடங்களுக்கும் அனுப்புகிறார்கள்.

கூடை முடைதல் :— மூங்கிலினால் கூடை முடைதல் மேட்டுப்பாளையம், சத்தியமங்கலம், பொள்ளாச்சி இவ்வூர்களில் மேதர்கள் என்னும் ஒரு வகுப்பினரால் நடைபெறுகிறது. முறம், சல்லடம், தட்டங்களும் செய்கிறார்கள். மேட்டுப்பாளையத்தில் கவரை வகுப்பினர் பழக் கூடைகள் முடைந்து கட்டுப்பாட்டுடன் கரூர் விலைக்கு விற்கிறார்கள்.

நார் உரித்தல் :— சில தெலுங்குச் செட்டியார்களால் கோபித் தாலூக்காவிலுள்ள அரியாம்பாளையத்தில் தாழையிலிருந்து நார் எடுத்து, சாக்குகள் நெய்யப்படுகின்றன. தாராபுரம் ஈரோடு தாலூக்காக்களில் சாணார்கள் பனையிலிருந்து, நார் எடுத்து ஜர்மனிக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அங்கு அந்நாரிலிருந்து பிரஷ் செய்கிறார்கள். திருப்பூருக்கு அருகிலுள்ள செட்டிப்பாளையத்தில் சில ஜங்கமர்கள் கண்ணாடியினால் மணிகள், விக்கிரகங்கள், மூக்குக் கண்ணாடிகள் முதலியன செய்கிறார்கள். போலி மாணிக்கங்களும் செய்து திருச்சிக்கு அனுப்புகிறார்கள். சில இடங்களில் உப்பிலியர்கள் வெடியுப்புக் காய்ச்சுகிறார்கள்.

வியாபாரம் :— நமது ஜில்லாவிலிருந்து விளைபொருள்களும், பிரசித்தி பெற்ற செய்பொருள்களும், தேவையுள்ள மற்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பருத்தி, பல வகைப் புன்செய்த்தானியங்கள் வெல்லம், புகையிலை, மிளகாய், சந்தனக் கட்டை, தோல், நெய், பித்தளைப் பாத்திரங்கள், துணி முதலியன வெளியிடங்களுக்குப் போகும் பொருள்கள். புகையிலை, வெல்லம், ஏலக்காய் அதிகமாய் மலையாளத்திற்கு அனுப்பப்படுகின்றன. இந்த ஜில்லாவில் அதிகமாய்க் கிடைக்காத பொருள்களை வேறு இடங்களிலிருந்து தருவிக்கிறார்கள். நெல், உப்பு, சீமை ஜவுளி, கண்ணாடி, மண்எண்ணெய், தீப்பெட்டி, காகிதம், பென்சில், உலோக சாமான்கள் வெளியிலிருந்து வரும் பொருள்களாகும்.

19. போக்கு வரவு சாதனங்கள்

நமது ஜில்லாவிற்குள்ளேயும் பல பாகங்களும் தங்களுக்குள் வியாபாரஞ் செய்து வருகின்றன. அவ்விதம் செய்யப் பல பாதைகள் இருக்கின்றன. விளையும்பொருள்களை விற்கவும், தேவையான பொருள்களை வாங்கவும் ஆங்காங்கு வாரச் சந்தைகள் மத்திய ஸ்தலங்களில் கூடுகின்றன.

சாதாரணச் சாலைகளும் இருப்புப் பாதைகளும் இருக்கின்றன.

ஸ்கேல் : 1 அங். = 16 மைல்


கோயமுத்தூர் ஜில்லா
இருப்புப்பாதைகள், சாலைகள்
சிவசமுத்திரம்
மைசூருக்கு
கொள்ளேகாலம்
ஹனூர்
லோகனஹள்ளி
ராமாபுரம்
பர்கூர்
சத்தியமங்கலம்
செல்லம்பாளையம்
அந்தியூர்
பவானி
கோபிசெட்டிபாளையம்
ஈரோடு
பெருந்துறை
உதகமண்டலத்திற்கு
மேட்டுப்பாளையம்
அன்னூர்
அவினாசி
திருப்பூர்
கொடுமுடி
காங்கேயம்
கரூருக்கு
கோயமுத்தூர்
போத்தனூர்
பல்லடம்
தாராபுரம்
பொள்ளாச்சி
உடுமலைப்பேட்டை
திண்டுக்கல்லுக்கு
ஆனைமலை
சேலத்திற்கு
சென்னையிலிருந்து
திருவாங்கூர்

எந்த ஜில்லாவிலும் காணப்படாத அவ்வளவு அதிகமான சாலைகள் ஒவ்வொரு முக்கியப் பட்டணத்திலிருந்தும் சிலந்திக் கூட்டைப்போல் அநேக திக்குகளில் செல்லுகின்றன. படத்தைப் பாருங்கள். கோயமுத்தூர் ஜில்லாவின் மலையில்லாத பாகம் அமைந்துள்ள இடத்தைக் கவனியுங்கள். காவேரியின் மத்தியபாகமும் அதைச் சார்ந்த மேல் பிரதேசமும் அதாவது கொங்குநாட்டின் மேல் பாதிடாகத்தெரிகிறது. முழுப்பிரதேசத்தையும் கவனித்தால் கிழக்குத் தொடர்ச்சி மலை, நீலகிரிமலை முறையே வடக்கிலும் மேற்கிலும் இருக்கின்றன. சேர்வராயன் மலை, கொல்லிமலை கிழக்கிலும், ஆனைமலை, பழநிமலை தெற்கிலும் இருக்கின்றன. மேலும் கிழக்குக் கடற்கரைக்கும், மேற்குக் கடற்கரைக்கும் மத்தியில் நமது ஜில்லா இருக்கிறது. கிழக்குமலைத் தொடர்ச்சிக்கும் பழநிமலைக்கும் இடையில் உள்ள சமவெளி அதிகமாயும், நீலகிரிக்கும் ஆனை மலைக்கும் மத்தியிலுள்ள இடைவெளி குறைவாகவும் இருக்கின்றன. எண்ணெய் ஊற்றும் புனல் போலத் தோன்றுகின்றது. ஐந்து முக்கிய சாலைகள் உண்டு. முதல்பாதை கோயமுத்தூரிலிருந்து சத்தியமங்கலம் வழியாக மைசூருக்குப் போகிறது. இதன் நீளம் இஜ்ஜில்லாவில் 68 மைல். இரண்டாம சாலை கோவையிலிருந்து சென்னைக்குப் போகும் சாலை. இது அவிநாசி, பெருந்துறை, பவானி, நெரிஞ்சிப்பேட்டை வழியாய் மேட்டூர், சென்னைக்குச் செல்லுகிறது. இதன் நீளம் இஜ்ஜில்லாவில் 76 மைல். மூன்றாம் பாதை கோயமுத்தூரிலிருநது பல்லடம், காங்கயம் வழியாய்த் திருச்சிபோகும் பாதை. இதன் நீளம் இஜ்ஜில்லாவில் 58 மைல். நான்காம் பாதை கோவையிலிருந்து பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வழியாய்ப் பழநி மதுரைக்குச் செல்லும் சாலை. இதன் நீளம் இஜ்ஜில்லாவில் 54 மைல். ஐந்தாம் பாதை கோவையிலிருந்து உதகமண்டலத்திற்குப் போகும் சாலை. இதன் நீளம் இஜ்ஜில்லாவில் 26 மைல். மேற்கண்ட ஐந்து பாதைகளும் சேர்ந்து ஒரே சாலையாகக் கோவையிலிருந்து பாலக்காடு வழியாகக் கள்ளிக்கோட்டை செல்லுகிறது. பாலக்காட்டுக் கணவாய் கீழ் ஜில்லாக்களையும் மேல்பாகத்தில் மலையாளத்தையும் சேர்க்கிறது. வியாபாரத்திற்கு உதவியாக இருக்கிறது. நமது ஜில்லாவின் பெரும்பாகம் வறண்ட பூமியானதாலும், கப்பி முதலிய கற்கள் சுலபமாய்க் கிடைப்பதாலும் அதிகமாய்ப் பாலம் கட்டும்படி ஆறுகள் அதிகம் இல்லாததாலும் சாலைகள் அதிகமாய் ஏற்படவும் நன்றாய்ப் பாதுகாக்கவும் முடிகிறது.

மோட்டார் பஸ் சர்விஸ்:—சுமார் 2700 மைல் நீளமுள்ள நல்லசாலைகள் இருக்கின்றன. படத்தைப் பார்த்தால் முக்கியமான இடங்களுக்குச் செல்லும் பாதைகளை நன்றாய் அறியலாம். இவ்விடங்களுக்குச் செல்ல நல்ல மோட்டார் பஸ் சர்விஸ்கள் நடைபெறுகின்றன. இம்மாதிரி சர்விஸ் வைத்து



U. M. S. ஆபீஸ், கோயமுத்தூர்

நடத்துவதில் U. M. S. மோட்டார் சர்விஸ் முதன்மை பெற்றது. இதற்

குத் தலைமை ஆபீஸ் கோயமுத்தூர். முக்கிய பஸ் ஜங்ஷன் பல்லடம்.

இப்பொழுது டிஸ்டிரிக்டு போர்டார் கோவைக்கும், பொள்ளாச்சிக்கும் பஸ் சர்வீஸ் வைத்து நடத்துகிறார்கள்.

இருப்புப் பாதை :—வட கிழக்கில் சென்னையிலிருந்து ஈரோடு, போதனூர் வழியாக மங்களூருக்கு ஒரு பாதையும், ஈரோடு, சிங்க நல்லூர் கோயமுத்தூர் வழியாக வடக்கில் மேட்டுப்பாளையத்துக்கும், அப்பால் நீலகிரிக்கு ஒரு பாதையும், போதனூரிலிருந்து தெற்கில் பொள்ளாச்சிக்கும், பொள்ளாச்சியிலிருந்து கிழக்கில் உடுமலைபபேட்டைக்கு ஒரு பாதையும், மேற்கில் பாலக்காட்டுக்கு ஒரு பாதையும், ஈரோடிலிருந்து கொடுமுடிக்குப் போகும் ஒரு பாதையும் ஆக ஆறு பாதைகள் உண்டு இரண்டு பாதைகளுக்குமேல் ஒன்று சேரும் இடம் ஜங்ஷன் ஆகும். போதனூர், பொள்ளாச்சி, ஈரோடு, கோயமுத்தூர் என்ற நான்கு ஜங்ஷன்கள் இருக்கின்றன. இன்னும் போடுவதற்காக உத்தேசிக்கப் படும் இருப்புப் பாதைகள் நான்கு. அவை (1) ஈரோடிலிருந்து சத்திய மங்கலம் வழியாக மைசூர் ராஜ்யத்திற்கு, (2) சத்தியமங்கலத்திலிருந்து கோபிசெட்டிபாளையம், திருப்பூர், காங்கயம், தாராபுரம்வழியாகப்பழநிக்கு, (3) சத்தியமங்கலத்திலிருந்து மேட்டுப்பாளையத்திற்கு, (4) பொள்ளாச்சியிலிருந்து வண்ணாந்துறைக்கு.

ஆனைமலை "ரோப்வே" என்ற "கயிறு வழி":—பொள்ளாச்சி தாலுக்காவில் மலையடிவாரத்திலுள்ள வண்ணாந்துறைக்கும் ஆனைமலை மீதுள்ள ஆயர்பாடி என்ற ஊருக்கும் மத்தியில் இரும்புக் கம்பி இணைக்கப்பட்ட ஒரு நீண்ட "பெல்ட்" போடப்பட்டிருக்கிறது அதன் நீளம் 9½ மைல். "பெல்ட்" முழுவதும் மணிக்கு 5 மைல் வேகத்தில் நகர்ந்து சென்று கொண்டேயிருக்கும். சாமான் மூட்டை அனுப்ப வேண்டுமானால் அதைக் கட்டி, கம்பியில் தொங்கவிட வேண்டும். இது ரோப்வே கம்பெனியாரால் 1928-ம் வருஷத்திலிருந்து நடைபெறுகிறது. மலைமேல் விளையும் காப்பி, தேயிலை மூட்டைகள் சுலபமாகக் கீழ் இறங்குவதற்கும், உணவுப் பொருள்கள் முதலியன சுலபமாக மலைக்குப் போகவும் இந்த ரோப்வே ஆச்சரியகரமாக உபயோகமாகிறது.

20. ஜனங்கள், மதம், பாஷை

ஜனத்தோகை :—1931-ம் வருஷத்திய ஜன சங்கியை (Census) கணக்குப்படி நமது ஜில்லாவில் 2,445,064



தாலூக்காக்களின் விஸ்தீரணம் :—சதுர மைல்

அல்லது சுமார் 24 லக்ஷம் ஜனங்கள் இருக்கின்றனர். மொத்த விஸ்தீர்ணம் 7,091 சதுர மைல். 1921-ம் வருஷத்திய சென்ஸஸில் கண்டதைவிட 134 சதுர மைல் குறைவு. அதற்கு முக்கிய காரணம் பவானி தாலுக்காவின் வடமேற்கு



ஜனத்தொகை

மூலையில் மேட்டூர் அணையும் அதைச் சுற்றியுள்ள பிரதேசமும் சேலம் ஜில்லாவில் சேர்க்கப்பட்டதேயாம். ஒரு சதுரமைலில் சராசரி 315



ஒரு சதுரமைலுக்குள்ள ஜனநெருக்கம்

ஜனங்கள் வசிக்கின்றனர். ஜன நெருக்கம் அதிகமுள்ள தாலூக்காக்கள் கோயமுத்தூர், ஈரோடு. குறைவுள்ள தாலூக்கா கொள்ளேகாலமாகும். கோயமுத்தூர் தாலூக்காவில் ஜில்லாவின் முக்கியப்பட்டணம் இருப்பதாலும், நிலவளமும், சமசீதோஷ்ணமும்பொருந்தியிருப்பதாலும் இத்தாலூக்காவில் ஜன நெருக்கம் அதிகம். நீர்ப்பாசனம், போக்கு வரவு வசதி அதிகமிருப்பதால் ஈரோடு தாலூக்காவில் அடுத்தபடியாக ஜன நெருக்கம் அதிகம். கொள்ளேகாலம் தாலூக்காவில் மலைகளும் காடுகளும் மிகுந்திருக்கின்றன ; சாலைகள் குறைவு ; மழை அதிகம் பெய்யும் ; நிலம்வளமாயிருப்பினும் மலைக்காய்ச்சல் உண்டு. அதனால் ஜனங்கள் அதிகமாய் இங்கு வசிப்பதில்லை.

மதம் :—இங்கு 100 க்கு 96 பேர் இந்துக்கள் ; 2 பேர் மகமதியர்கள் ; 2 பேர் கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவர்கள் தொகை குறைவாயிருந்தாலும் அதிகப் பேர் பட்டணங்களில் வாசம் செய்கிறார்கள். இந்துக்களில் 100-க்கு 8 பேர்தான் நகர வாசம் செய்கிறார்கள். மகமதியர்கள் அதிகமாயுள்ள தாலூக்காக்கள் கோயமுத்தூரும், பொள்ளாச்சியுமாகும். கிறிஸ்தவர் அதிகமாயுள்ளவை கோயமுத்தூரும், தாராபுரமுமாகும். இந்த ஜில்லாவில் வேளாளர், கம்மவார், போயர், கைக்கோளர், வன்னியர், விசுவப் பிராமணர், சக்கிலியர் அதிகம்.

பாஷை :—தமிழ்தான் முக்கிய பாஷை. 100-க்கு 65 பேர் தமிழும், 22 பேர் தெலுங்கும், 12 பேர் கன்னடமும், ஒருவர் இந்துஸ்தானியும் பேசுகிறார்கள். தெலுங்கு பேசுவோர் அநேகமாய் கம்மவார், பலிஞ்சியர், வடுகர், சக்கிலியராகும். கன்னடம் பேசுவோர் மைசூரை அடுத்த கொள்ளேகாலம் தாலூக்கா வடபாகத்தில் இருப்போர்.

கல்வி.—கல்வி இந்த ஜில்லாவில் சற்று குறைவு. ஆண்களில் 100-க்கு

15 பேர்களும் ஸ்திரீகளில் 100-க்கு 2 பேர்களும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். வேளாண்மை செய்பவரிடையே கல்வி குறைவு. கோயமுத்தூரில் 2-ந்தரக் கல்லூரி ஒன்று இருக்கிறது. விவசாயக் கல்லூரி, ஆண் பெண் ஆகிய இரு வகுப்பினர்களுக்கும் தனித்தனி போதனாமுறைப் பாடசாலைகள் முதலியன தொழிற்கல்வி அளிக்கின்றன. 28 செகண்டரி பாடசாலைகளும், சுமார் 1,500 ஆரம்பப் பாடசாலைகளும் உண்டு.

கிராம வாழ்க்கை :—பிள்ளைகளே ! உங்கள் கிராமத்துக்கும் மற்ற கிராமங்களுக்கும் சில வித்தியாசங்கள் உண்டு. சில கிராமங்கள் விஸ்தீரணத்தில் பெரியவை; சில மலையடர்ந்து மேடுபள்ளங்கள் நிறைந்தவை; சில நதி பாயும் சமவெளியில் உள்ளவை; சில பட்டு நெசவு, பாத்திரம் செய்தல், பனைவெல்லம் செய்தல் முதலிய கைத்தொழில் விசேஷமாக நடைபெறுமிடங்கள். சில ஜமீன்தார் வசிக்குமிடங்கள். இவ்விதங்களில் வித்தியாசங்கள் பல இருப்பினும் விவசாயம் செய்வதிலும், குணவிசேஷங்களிலும் அதிக வித்தியாசம் காணப்படவில்லை. நமது ஜில்லாவின் கிராமங்களில் பொதுவாய் உள்ள விவரங்களை இங்குக் கவனிப்போம். கூடியவரையில் கிராமத்தோர் ஜில்லாவில் பேசிவரும் விசேஷ வார்த்தைகளை உபயோகிக்க முயலுவோம்.

புன்செய் நிரம்பிய இந் நாட்டில் கிராமத்தின் நான்கு பககங்களிலும் சோளக்காடு, கம்பங்காடு, தினைக்காடு, கொள்ளுக்காடு முதலியவை நிறைந்திருக்கின்றன. கதிர்கள் பால் பிடிக்கும்போது கால்கள் நட்டு அவைகள்மேல் இலை தழை போட்டு பரண் போடுகிறார்கள். பகல் நேரத்தில் சிலர் அதன்பேரில் நின்று குருவியோட்டக்கவண் எறிகிறார்கள். காடுகளில் காடையும் கவுதாரியும் கத்திக்கொண்டிருக்கும். சாமைக் காட்டில் பெண்கள் களைவெட்டுவதைப் பார்க்கலாம். காட்டில் சின்னப் பூக்களையுடைய பண்ணைக் கீரை முளைத்திருக்கும். தரிசு நிலத்தில் கொழுஞ்சி, எருக்கு, குடைவேல மரம், வெள்வேலமரம், ஆவாரஞ் செடியும், வேலியில் பூலாஞ்செடியும் இட்டேரியில் திருகுகள்ளி, சாதாரணக் கள்ளி இவை வளர்ந்திருக்கின்றன. ஊர் மந்தையில் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு சிறுவர் விளையாடுவதும் குழல் ஊதுவதும் அழகாயிருக்கின்றன.

ஊர்க் கிணற்றைச் சுற்றிப் புதர் அடர்ந்திருக்கிறது. ஸ்திரீகள் புடவையைச் சும்மாடு சுற்றித் தலையில் வைத்து அதன் பேரில் ஜலம் மொண்ட குடத்தை வைத்து வேடிக்கையாகப்பேசிக்கொண்டே வீட்டுக்கு வருகிறார்கள். குடியானவர் காலை நேரத்தில் கவலை மாடுகளையும் ஏர்களையும் ஓட்டிக்கொண்டு கடைமுளை, கண்ணிக்கயிறு, தாம்பு முதலியன தாங்கிச் செல்லுகிறார்கள். நிலபலம் உடையவர் பண்ணாடி என்றும், பண்ணையில் வேலை செய்பவர் கூலியாட்கள் என்றும் சொல்லப்படுவர். மற்றவர் சாதாரணமாய்க்குடியானவர் ஆவர். செட்டிமார், பிராமணர், விசுவகர்மர், குயவர், வண்ணார், நாவிதர் முதலான குடிகளும் கிராமத்தில் உண்டு.

ஊரின் ஆரம்பத்தில் குப்பை கூளம் கிடக்கிறது. வீடுகள் நெருக்கமாய் இருப்பதால் தெருக்கள் குறுகியவை. தெருக்கள் ஒழுங்காயும் இருப்பதில்லை. அரச மரத்தடியில் உள்ள பிள்ளையார் கோவில், ஊர்ச்

சாவடி, தொண்டுபட்டி, பள்ளிக்கூடம் முதலியவை பொதுவிடங்களாகும். வெற்றிலைப் பாக்குக்கடை, மிட்டாய்க்கடை, பலசரக்குக் கடை, தையற்கடை இவை உண்டு.

மனிதர் பொதுவாக முடிந்த குடுமியும், படிந்த மீசையும் உள்ளவர். காதில் கடுக்கனும், இடுப்பில் வேஷ்டிக்குமேல் அரைஞாணும் இருப்பதைக் காணலாம். பொதுவில் ஜனங்கள் கடவுளிடம் பக்தியாகவும், மக்களிடம் அன்பாகவும் இருக்கின்றனர். விருந்தினரை உபசரிப்பதில் மிகவும் பேர்போனவர்.

ஸ்திரீகள் தோட்டத்தில் தூய காற்றில் வேலை செய்கிறார்கள். திட சரீரம் பெற்றவர். நெற்றியில் திருநீறும், கொண்டையில் மருக்கொழுந்தும் தரித்திருக்கின்றனர். தாலிக் கயிற்றில் அலரிப் பூ வைத்திருக்கிறார்கள். சிலர் நவீன முறையில் கம்மல் அணிந்திருக்கிறார்கள். செட்டாகக் குடித்தனம் செய்வதிலும், கணவருக்குக் கீழ்ப்படிந்து உதவி செய்வதிலும் பேர் பெற்றவராவர்.

பொழுது போக்குக்காகச் சேவற் கட்டு, புராணம்வாசிப்பதுகேட்டல், உடுக்கையுடன் கதை பாடுவதைக் கேட்டல், நாடகம் பார்த்தல், ஒயிற் கும்மி, வட்டக்கும்மி அடித்தல் முதலியவைகளில் ஈடுபடுகின்றனர். வயது வந்தவரும் மற்றோரும், ஊர்ச்சாவடியில் உட்கார்ந்து அநேக விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தை மாத ஆரம்பத்தில் பட்டி நோன்பு பெண்களாலும் விமரிசையாகக்கொண்டாடப்படுகின்றன.

ஊர்ப் பண்ணாடி, மணியக்காரர், கணக்குப்பிள்ளை, உபாத்தியாயர் முக்கியஸ்தர். உத்தியோகஸ்தர்களும் மற்ற பெரியோர்களும் வந்தால் இவர்கள் போய் மரியாதையாய் உபசரிப்பது வழக்கம்.

அப்பியாசங்கள்

1. நமது ஜில்லாவின் எல்லைகள் என்ன ?

2. நமது ஜில்லாவின் மூன்று இயற்கைப் பிரிவுகளைப்பற்றி எழுதுக.

3. மேற்கு, வடக்கு நோக்கிப்போகும் நதிகள் யாவை? கிழக்கு நோக்கிப் போகும் மூன்று நதிகள் யாவை ? எந்தப் பெரிய நதியில் போய்ச் சேருகின்றன? இவைகளை விளக்கப் படம் போடு. களிமண் உருவம் அமைத்தும் காண்பி.

4. நதிகளின் கரையில் உள்ள முக்கியப் பட்டணங்களைச் சொல்.

5. ஐப்பசி, கார்த்திகை மாதத்தில் எந்தத் திசையிலிருந்து பருவக்காற்று வீசுகிறது? மலையாளத்தை விட நமது ஜில்லாவில் ஏன் மழை மிகவும் குறைவு ?

6. ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் எந்தத் திசையிலிருந்து பருவக் காற்று வீசுகிறது ? இந்தப் பருவக்காற்றினால் வடகிழக்குப் பருவக்காற்றைவிட எவ்வளவு பங்கு அதிக மழை கிடைக்கிறது ?

7. பாலக்காட்டுக் கணவாயினால் ஏற்படும் நன்மைகள் என்ன ?

8. மழை மிகவும் அதிகமாக உள்ள இடம் எது ? மிகவும் குறைவான பாகம் எது ?

9. மிளகாய், புகையிலை அதிகமாகப் பயிராவதற்குக் காரணம் என்ன ?

10. நிலக்கடலை, பருத்தி எங்கு அதிகம் விளைவு ? காரணம் கூறுக.

11. கொள்ளே காலத்தில் முசுக்கட்டைச் செடி பயிர் செய்ய வசதி இருக்கிறது ? அதனால் என்ன நன்மை உண்டாகிறது ?

12. மாடுகள் புஷ்டியாக வளர்வதற்குக் காரணம் என்ன ? மூன்று ஜாதி மாடுகளையும் பற்றிச் சொல்.

13. நமது ஜில்லாவில் நடைபெறும் முக்கியக் கைத்தொழில்களைக் கூறு.

14. முக்கிய ரஸ்தாக்கள் எவை ? அவைகள் எந்த இடத்தை நோக்கிச் செல்லுகின்றன ?

15. இந்த ஜில்லாவில் உள்ள ரயில் ஜங்ஷன்களின் பெயர் என்ன ? அவைகளில் வந்து கூடும் இருப்புப் பாதைகள் எவை ?

16. ஜன நெருக்கம் அதிகமாய் உள்ள தாலூக்காக்கள், ஜனம் அதிகக் குறைவாக உள்ள தாலூக்காக்கள் எவை? காரணம் கூறுக.

17. கன்னடம் எங்கு அதிகமாய்ப் பேசப்படுகிறது ?

ஸ்கேல்: 1 அங். = 16 மைல்



தாலுக்காக்களும் முக்கிய பட்டணங்களும்.

21. அரசாங்கப் பிரிவுகள்

ஜில்லா என்பது ஒரு விசாலமான இடம். இதை ஒரு கலெக்டர் மட்டும் நேராக ஆளுவது கஷ்டம். ஆகவே நமது ஜில்லா பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தாலூக்கா என்று பெயர். நமது ஜில்லாவில் 10 தாலூக்காக்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு தாலூக்காவுக்கும் முக்கிய அதிகாரி தாசில்தார். இவரது வேலையை மேல் பார்வை செய்ய இரண்டு தாலூக்காக்களுக்கு ஒரு ரேவின்யூ டிவிஷனல் ஆபீஸர் அல்லது சப் கலெக்டர் இருப்பார் ஜில்லாவில் 5 டிவிஷனல் ஆபீஸர்கள் உண்டு. கொள்ளேகாலம் தாலூக்கா மட்டும் ஒரு டிப்டி கலெக்டர் டிவிஷன். பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை ஆக மூன்றும் சேர்ந்து பொள்ளாச்சி சப்கலெக்டர் டிவிஷன். கோயமுத்தூர், அவிநாசி சேர்ந்து கோயமுத்தூர் டிவிஷனாகவும், ஈரோடு, தாராபுரம் சேர்ந்து ஈரோடு டிவிஷனாகவும், கோபி, பவானி சேர்ந்து கோபி டிவிஷனாகவும் இருக்கின்றன.

மேலும் ஸ்தல சுய ஆட்சி சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்க இந்த ஜில்லாவிற்கு ஒரு ஜில்லா போர்டு சபை இருக்கின்றது. அதற்குக் கோயமுத்தூர் ஜில்லா போர்டு சபையென்று பெயர்.

ஒவ்வொரு தாலூக்காவையும் விபரமாக இனி படிப்போம்.

22 தாலூக்காக்களும் முக்கிய பட்டணங்களும்

i. கோயமுத்தூர் தாலூக்கா

கோவை, போதனூர், துடியலூர், பெரிய நாய்க்கன் பாளையம், மதுக்கரை முதலிய இடங்களைப் பற்றி முன் பிரயாணத்திலேயே கவனித்திருக்கிறோம்.

கோயமுத்தூர் (94,750):—இது நமது ஜில்லாவின் முக்கியப் பட்டணம். நொய்யலாற்றின் இடது கரையிலுள்ளது. இது வாசத்திற்கு மிகவும் ஏற்ற ஒரு முனிசிபல்பட்டணம். இந்த ஊர் சென்டிரல் ஜெயிலில் கைத்தொழில் மிகுதியாக நடைபெறுகிறது. பருத்தி நூல் நூற்கும் சாலைகளும், காப்பிக்கொட்டை சுத்தி செய்யும் தொழிற் சாலையும் இருக்கின்றன இங்கு ஒரு விவசாயக் கலாசாலையும் ஒரு துரைத்தனக்கல்லூரியும் அநேக உயர்தரக் கலாசாலைகளும் இருக்கின்றன.



விவசாயக் கலாசாலை

போதனூர்(12656):—இது குறிஞ்சிடவுனைச் சேர்ந்தது. இது முக்கியமான ரயில்வே ஜங்ஷன். கோயமுத்தூருக்கு $4\frac{1}{2}$ மைல் கிழக்கே யுள்ளது.

துடியலூர் (2,080):—கோவைக்கு வடக்கே 6 மைலில் உள்ளது. இங்கு திங்கட்கிழமை தோறும் சந்தை கூடும். ஸ்டேன்ஸ் கம்பெனியார் இங்கு எலும்பு உரம் செய்ய யந்திர சாலையை வைத்திருக்கிறார்கள்.

பேரூர் (2,971):—இது கோயமுத்தூருக்கு மேற்கில் நான்காவது மைலில் இருக்கிறது. இதன் பக்கத்தில் நொய்யல் நதி ஓடுகிறது. இது ஒரு பெயர் போன சிவ ஸ்தலம். மேலைச் சிதம்பர மென்று சொல்லுகிறார்கள். ஆச்சரியமான சிற்பவேலை அமைந்த மண்டபமும் இருப்பதைப்

பாருங்கள். உள்கோபுரத்தில் தங்கக் கலசமும் வெளிக் கோபுரத்தில் அழ



பேரூர் கோயில்

கிய உருவங்களும் காணப்படுகின் றன. மலையாளத்து ஜனங்களில் அநேகர் இறந்தவர் எலும்புகளை பக்தியுடன் கொண்டு வந்து இவ் வூர் ஆற்றில் போடுகிறார்கள். மார்கழி மாதம் ஆருத்திரா தரி சனமும், பங்குனி மாதம் ரத உற் சவமும், ஆனி மாதம் "நாற்று நடவு"த் திருவிழாவும் நடை பெறும். கோவிலுக்குச் சமீபத்தில் ஒரு பெரிய மடம் சாந்தலிங்கசுவாமி கள் பெயரால் விளங்குகிறது. அவர் ஒரு தமிழ் அடியார். பேரூ ரில் வசித்திருந்தார். ஆதி காலத்தில் பேரூர் என்பது பேரூர் நாட்டிற்கு முக்கியப் பட்டணமாயும், கோயமுத் தூர் ஒரு சிறு கிராமமாயு மிருந்ததாகச் சொல்லப்படு கிறது.

மதுக்கரை (2,344) :—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு சிமெண்ட் கம்பெனி இருக்கிறது.

மருதமலை :—கோயமுத் தூரிலிருந்து பார்த்தால் வடமேற்கில் மருதமலையில் உள்ள கோவில் தென்படு கிறது. கோவையிலிருந்து 8மைல் தூரத்திலுள்ளது. மருதமரம் ஸ்தல விருக்ஷம். அதன் வேரில் பாயும் ஜலத்தைத் தேக்கி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலிருந்து ஜலத்தை எடுத்து ஸ்நானம் செய்கிறார்கள். ஜலம்சுத்த மாயிருக்கிறது. கோயமுத்தூரிலி ருந்து கூட்டம்கூட்டமாக விடுமுறை நாட்களில் ஜனங்கள் வந்துவிருந்து சாப்பிடுவது வழக்கம்.

போளுவாம்பட்டி (3,151) :—பேரு ருக்கு 8 மைல் தூரத்தில் நொய் யல் நதியின் வடக்குக் கரையில் இருக்கிறது. இது சிறைச்காட்டை அடுத்திருக்கிறது. காட்டு விளை பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. மேற்கில் ஒரு மைல் தூரத்தில் அழிந்துபோன ஒரு நகரமும்கோவி லும் இருக்கின்றன. இயற்கைக் கோட்டையும், இயற்கை அகழியின் சின்னங்களும் காணப்படுகின்றன. பழைய காலத்தில் இது "நாகைப் பட்டணம்" என்று பெயர் பெற் றிருந்ததாம். கோவிலில் உள்ள மீனாக்ஷியம்மன் விக்கிரகம் இப்



சிமின்ட் கம்பெனி, மதுக்கரை.

போதும் அழகாய் இருப்பதைப் பாருங்கள். மதுரை மீனுக்ஷியம்மன் விக்கிரகம் செய்த சிற்பியே இதைச் செய்ததாகச் சொல்லுகின்றனர்.

பீளமேடு :—கோவைக்கு 3 மைல் தூரம் வடகிழக்கில் சென்றதும் பீளமேடு அடைகிறோம். நூல் நூற்கும் பெரிய யந்திரசாலைகள் இருக்கின்றன. பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் ஒரு ஹைஸ்கூலும், தொழிற் கல்விப் பாடசாலையும் நடத்தி வருகிறார்கள். தொழிற் பாடசாலையில் இரும்புக் கதவு, பெட்டி முதலியன செய்யப் படுகின்றன.

சிங்காநல்லூர் (7,504) :—தென்கிழக்கில் 4 மைல் தூரத்தில் சிங்கநல்லூர் கிராமம் இருக்கிறது. திருச்சி போகும் பெரிய ரஸ்தாவில் உள்ள இடம். இங்கிருந்து கோவைக்கு குறுக்கு ரயில் பாதை ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் இங்கு விசேஷம். கரும்பும், வெற்றிலையும் அதிகம். வெற்றிலை பல இடங்களுக்கு ரயில் மூலம் அனுப்பப்படுகிறது.

வெள்ளலூர் (7,981) :—நொய்யல் நதியைத் தாண்டி 3 மைல் எரிக்கரையில் போய் வெள்ளலூர் சேருகிறோம். இந்த ஊர் பழைய காலத்தில் அன்னதான சிவபுரி என்று பெயர் பெற்றிருந்தது. சில வருஷங்களுக்கு முன் பூமியைத் தோண்டுகையில் ரோம நாணயங்கள் கிடைத்தன. ரோம ராஜ்யத்துக்கும் இவ்வூருக்கும் முன் ஒரு காலத்தில் வியாபாரம் நடந்திருக்கலாம் என்று தெரிகிறது. வெற்றிலைப் பயிர் அதிகம். கயிறு திரிக்கின்றனர். சிலர் நெசவு நெய்கின்றனர்.

செட்டிப்பாளையம் (4,148) :—பொள்ளாச்சி இருப்புப்பாதையில் உள்ளது. புகையிலை வியாபாரம் அதிகம். புகையிலை ரயில் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வாசுதேவ முதலியார் என்ற கீர்த்தி வாய்ந்த புலவர் இந்த ஊரில் தான் பிறந்தவர்.

மயிலேறுபாளையம் :—கோயமுத்தூருக்கு 10 மைல் தென்கிழக்கேயுள்ளது. கோவிந்தராவ் என்பவர் ரெவினியூ சீர்திருத்த சம்பந்தமாய் கிழக்கு இந்தியக் கம்பெனியாருக்குச் செய்த அரிய சேவைக்காக இவ்வூரையும் இன்னும் 6 கிராமங்களையும் 1829-ம் வருஷத்தில் ஜாகிராக இவருக்குக் கொடுத்தார்கள்.

இதர முக்கிய ஊர்கள் :—கணபதி (5,479), இடிகரை (4,286), குனியாமத்தூர் (5,698), சவுரிபாளையம் (9,508), தெலுங்குப்பாளையம் (8,482).

ii பொள்ளாச்சி தாலூக்கா

இத்தாலூக்காவின் எல்லைகளைப் படத்தில் பார்.

பொள்ளாச்சி (22,112) :—இது இத்தாலுக்காவின் முக்கிய முனிசிபல் பட்டணம். ஜில்லாவிலேயே பெரிய சந்தை கூடுமிடம். வியாழக்கிழமை தோறும் சந்தை கூடும். இந்த ஊர் பாலக்காட்டுக் கணவாய்க்கு எதிரே இருக்கிறது. ஆனைமலையில் உண்டாகும் சாமான்களும் மதுரை, மலையாளம் ஜில்லாக்களில் உண்டாகும் விளைபொருள்களும் இங்கு விற்பனைக்கு வருகின்றன.

ஊத்துக்குளி (4,352) :—பொள்ளாச்சிக்கு மேற்கில் 2-வது மைலில் உள்ள ஜமீன் கிராமம். மதுரையில் விசுவநாத நாயக்கர் பிரதிநிதியாக ஆட்சி செய்கையில் இவ்வூர் காளிங்கராயர் பாளையக்காரராக நியமிக்கப்பட்டார். அவர் வம்சத்தில் தோன்றிய ஜமீன்தார் குடகு ராஜ்யத்தை அடக்க மைசூருக்கு உதவி புரிந்து, பொற்பல்லக்கு சன்மானம் பெற்றார். மலையாளத்துக்குப் போகும் கணவாய் வழியைப் பாதுகாத்தார். பிற்காலத்

தில் திப்பு சுல்தானுல் தொந்தரவு ஏற்பட்டது. ஆங்கிலேயருடன் நட்பாக இருந்ததற்காக, கிழக்கிந்தியா கம்பெனியாரிடமிருந்து நிரந்தர மான சன்னது பெற்ருர். அரண்மனையைச் சுற்றிப்பாருங்கள். பழைய ஜமீன்தார் படங்கள், விருந்து செய்யும் இடம், தானியம் போடும் களஞ்சியம், ஆயுதங்கள் வைக்கும் இடம், ஆபீஸ் முதலியன முக்கியமானவை.

இந்த ஜமீன் போலவே புரவிப் பாளையம், ஆவலப்பம்பட்டி, ராமப் பட்டணம், சமத்தூர், நெகமம், கோட்டாம்பட்டி முதலிய ஜமீன் கிராமங்கள் இத்தாலுக்காவில் உண்டு.

ஆனைமலை (8,213) :—ஊத்துக்குளியிலிருந்து 6 மைலில் ஆனைமலை என்ற பெரிய ஊர் ஆளி ஆற்றின் கரையில் இருக்கிறது. முன் காலத்தில் பக்கத்துக் காடுகளில் யானைகள் அதிகம் இருந்து ஜனங்களுக்குத் தொந்தரவு கொடுத்து வந்தன. இப்போது அவ்விதமான தொந்தரவு இல்லை. பழய சிவன் கோவில் ஒன்று இருக்கிறது. அதன் பூஜை செய்பவருக்கு மைசூர் அரசர் பட்டையம் கொடுத்திருக்கிருர். குன்றின்மேல் உள்ள சக்கரகிரி துர்க்கத்தில் விஷ்ணு கோயில் இருக்கிறது. சமீபத்திலுள்ள மலைகளில் விளையும் பொருள்கள் இங்கு வியாபாரம் ஆகின்றன. புதன்கிழமை தோறும் சந்தை கூடும். இவ்வூரில் தமிழ் வித்வான்கள் இருக்கின்றனர்.

கோட்டூர் (9,555) :—ஆனைமலைக்கு 5 மைல் கிழக்கில் கோட்டூர் இருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் சில விக்கிரகங்கள் பூமியிலிருந்து கிடைத்தன. அவைகள் ஊர்க்கோவிலில் வைக்கப்பட்டிருக்கின்றன.

நெகமம் (4,076) :—பொள்ளாச்சிக்கு 9 மைல் வடகிழக்கில் இருக்கிறது. இது ஒரு பெரிய கிராமம். ஆஸ்பத்திரியும் ஒரு பெரிய சத்திரமும் உண்டு. தெலுங்கு செட்டியார் அதிகம். ஜமீன் சொத்தை ஸ்ரீரங்கம் கோவிலுக்கும் கல்வி அபிவிருத்திக்கும் எழுதிவைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சூலக்கல்(2,087):--பொள்ளாச்சிக்கு 7 மைல் வடக்கே சூலக்கல் இருக்கிறது. இங்கு பிரபலமான மாரியம்மன் கோவில் இருக்கிறது. கிராமத்தின் சமீபத்தில் சூலக்கல் என்ற ஆறு மேற்கு நோக்கி ஓடுகிறது.

இதர முக்கிய ஊர்கள் :—கிணத்துக்கிடவு (2,9;7), வேட்டக்காரன் புதூர் (7,697).

iii. உடுமலைப்பேட்டை தாலுக்கா

இத்தாலூக்காவின் கீழ் பாகத்தில் அமராவதி நதி ஓடுகிறது. அதன் கரையில் உள்ள கிராமங்கள் செழிப்புள்ளன. கொழுமம், குமரலிங்கம், கணியூர், கடத்தூர், காரத்தொழுவு என்பவை முக்கியமானவை. இவைகளில் உள்ள கோவில்கள் சோழரால் கட்டப்பட்டவை. கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

உடுமலைப்பேட்டை (12,172) :—இது ஒரு முனிசிபல் பட்டணம். ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு வியாபாரம் அதிகம்.

கணியூர் (3,981) :—உடுமலைப்பேட்டையிலிருந்து கிழக்கில் 9 மைல் தூரத்தில் இருக்கிறது. மகமதியர் அதிகம் உண்டு. அவர்களுக்குப் பொது வாய் இந்துஸ்தானி தெரியாது. இத்தக் கிராமம் கு ரன் என்ற சிற்றரசனுக்குச் சொந்தமாய் இருந்ததென்று சொல்லப்படுகிறது. அவனைப்பற்றிப் பாட்டுகள் சில பழக்கத்

தில் உண்டு. இடிந்த கோட்டைகள் காணப்படுகின்றன.

சோழமாதேவி (2,122) :—தெற்கில் 1½ மைல் தூரத்தில் சோழமாதேவி என்ற ஊர் இருக்கிறது. இங்கும் மகமதியர் அதிகம்.

ஜல்லிப்பட்டி (3,503) :—உடுமலைப் பேட்டைக்குத் தெற்கில் 6 மைல் தூரத்தில் உள்ளது. பருத்தி ஏராளமாக விளைகிறது.

பூதிநத்தம் :—உடுமலைப் பேட்டைக்குப் போகும் பாதையில் மத்தியில் உள்ள ஊர்.

இத்தாலூக்காவிலும் ஜமீன் கிராமங்கள் உண்டு. இவைகள் தாலூக்காவின் வடகிழக்குப் பாகத்தில் இருக்கின்றன. அவைகள் மெய்ராத்தி, மெய்வாடி, துங்காவி, ஜோதம்பட்டி, வேடப்பட்டி என்பனவாம்.

இதர முக்கிய ஊர்கள் :—குமரலிங்கம் (3,350), சங்கரமநல்லூர் (6,512)

iv. அவிநாசி தாலூக்கா

அவிநாசி (4,836) :—இது இத்தாலூக்காவின் முக்கிய பட்டணம். திருப்பூர் ரயில் ஸ்டேஷனுக்கு 8 மைல் வடமேற்கே உள்ளது. அவிநாசிக்குப் போகும் வழியில் பனைமரங்களைப் பார்க்கிறோம் இங்கு தாலூக்காக் கச்சேரி உண்டு. இதன் பழைய பெயர் திருப்புக் கொளியூர். இது "தக்ஷிண காசி" என்றும் கூறப்படுகிறது. இங்குள்ள சிவாலயத்தில் சுந்திரமூர்த்தி நாயனரின் கோவிலும் இருக்கிறது. அந்த நாயனர் பக்தியின் பெருமையால் முதலை வாயிலிருந்து ஒரு குழந்தையை மீட்டார். அவன் ஞாபகமாக அவருக்காகக் கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. சித்திரை உற்சவகாலத்தில் கால்நடைச்சந்தை நடைபெறும். வாரச்சந்தையுமுண்டு. இத்தாலூக்காவில் விளையும் காய்கறி, தானியங்கள் நீலகிரி ஜில்லாவிற்கு அனுப்பப்படுகின்றன.

காரமடை (6,286) :—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். பிரபல விஷ்ணு ஸ்தலம். இங்கே ரங்கநாத ஸ்வாமிக்கு மார்ச்சுமீ நடைபெறும் தேர்த் திருவிழாவுக்கு ஏராளமான ஜனங்கள் கூடுகிறார்கள்.

மேட்டுப்பாளையம் (11,475) :—இது பவானி நதிக்கரையில் உள்ளது. இங்கிருந்து நீலகிரி மலை இருப்புப்பாதை ஆரம்பிக்கிறது. இங்கு உஷ்ணம் அதிகம். மலேரியா ஜுரம் இவ்வூரில் அதிகம். ஆகையால் இவ்வூர் வாசத்திற்கு ஆரோக்கியமானதல்ல. இங்குத் தோல் பதனிடும் தொழிற்சாலையொன்று உண்டு. இங்கு நீலகிரி காப்பி, உருளைக்கிழங்கு வியாபாரம் அதிகம். ஜில்லாபோர்டார் புதிதாய் ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

திருமுருகன் பூண்டி :—அவிநாசிக்குத்தென்கிழக்கில் 3 மைல் தூரத்தில் பல்லடம் தாலூக்காவின் எல்லையில் உள்ள சிவ ஸ்தலம். சுந்திரமூர்த்தி நாயனர் இங்கு வரும் வழியில் திருடர்கள்வளைத்து, சாமான்களைக் கவர்ந்தனர். எனினும் கடவுளைப் பிரார்த்தனை செய்ததில் அவர் சாமான்கள் மீண்டும் கிடைத்தனவாம். இந்தக்கோவில் தடாகத்தில் தொடர்ச்சியாக ஸ்நானம் செய்து முருகனை வணங்கினல் பைத்தியம் பிடித்தவரும் சுகமடைகின்றனராம்.

செய்யூர் (சேவூர்) (3,882) :— அவிநாசியிலிருந்து வடமேற்கில் 6 மைலில் உள்ள சிவஸ்தலம். இங்குள்ள செம்பியன் குளத்தின் ஜலம் வியாதியைப் போக்கும் என்று சொல்லுகிறார்கள். இவ்வூரில் முத்துக்குமார தேவர் மடம் ஒன்று இருக்கிறது. அந்தத் தேவர் முன் காலத்தில் இறக்கும்பொழுது அவயவங்களைப் பறவைகளுக்கு அளித்தாராம். பின் மடம் திருப்பணி செய்யும்பொழுது குழிதோண்டுகையில் உடம்பு பூர்த்தியாக இருந்ததாகவும், இதனால் மடத்தின் பெருமை அதிகரித்ததாகவும் சொல்கிறார்கள்.

கரவலூர் :— அவிநாசியி லிருந்து மேற்கில் மேட்டுப்பாளையம் போகும் பாதையில் அன்னூருக்குப் பாதி வழியிலே உள்ள கிராமம். மாரியம்மன் கோவில் பிரசித்தி பெற்றது.

அன்னூர் (5,399) :— இதன் பழையபெயர் வன்னியூர். சத்தியமங்கலம் போகும் பாதையில் இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷன் உள்ள ஊர். இரண்டு பழைய கோவில்களும் ஒரு சிறு ஏரியும் உண்டு.

கல்லார், சிறுமுகை முதலிய இடங்களைப்பற்றி முன்னமேயே நாம் கவனித்திருக்கிறோம். சத்தியமங்கலம் சென்று அங்கிருந்து கிழக்கே கோபிக்குப் போய்ச் சேருவோம்.

V. கோபிசெட்டிபாளையம் தாலுக்கா

கோபி (16,304) :— இங்குதாலுக்கா கச்சேரி இருக்கின்றது. சுற்று வட்டத்திலுள்ள புன்செய் நிலம் வளமுள்ளது. ஈரோடு 24 மைல் தூரத்தில் இருக்கிறது. கோபி ஒரு வியாபார ஸ்தலம். இங்கு சில கனவான்கள் ஆதரவில் ஹைஸ்கூல் ஒன்று நடைபெறுகிறது.

சத்தியமங்கலம் (4,434) :— இது பவானி நதிக்கரையிலுள்ளது. செவ்வாய்தோறும் இங்கு ஒரு சந்தை கூடும். கோவையிலிருந்து 40 மைல்.

சிறுவளூர் (5,036) :— சத்தியமங்கலத்திலிருந்து பெருந்துறைபோகும் சாலையில் 17 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்த ஊர் வாசத்திற்கு மிகவும் ஆரோக்கியமானது.

கோடிவேறி (2,813) :— பவானி நதிக்கரையில் கோபிக்கு 9 மைல் தூரத்தில் உள்ளது. நதியில் கல்லணை கட்டி, பல கால்வாய்களின் மூலம் ஜலம் பாய்கிறது. அதனால் இந்தப் பக்கத்தில் நிலம் செழிப்பாய் இருக்கிறது.

பெருந்தலையூர் (2,392) :— பவானி தாலுக்காவின் எல்லையில் இருக்கிறது. கோபியின் கிழக்கே 5 மைல் தூரத்தில் உள்ள ஊர். இங்கு பழைய சிவன் கோவில் இருக்கிறது.

கூகலூர் (7,518) :— கோபியின் 4-வது மைலிலுள்ள சிவஸ்தலம். இங்குப் புகையிலை அதிகம் பயிர் செய்யப்படுகிறது. மலையாளத்து வியாபாரிகள் முன்பணம் கொடுத்து வாங்கிப் போகின்றனர்:

வின்னப்பள்ளி (2,338) :— சத்தியமங்கலத்திலிருந்து 9 மைல் தூரத்தில் கோவைரஸ்தாவில் உள்ள ஊர் ஒரு மைல் தூரத்தில் உள்ள வள்ளிப்பாளையத்தில் கத்தோலிக் கிறிஸ்தவர் மாதா கோவில் இருக்கிறது. சுமார் 600 கிறிஸ்தவர்கள் இங்கு வசிக்கின்றனர்.

புளியம்பட்டி (4,596) — அதே ரஸ்தாவில் தெற்கில் சென்றால் 7-வது மைலில் இவ்வூர் வந்து சேரு

கிறோம். அவிநாசி தாலூக்காவின் வடக்கெல்லையில் இருக்கிறது. கால் நடைச் சந்தை விசேஷமானது.

கஜலத்தி கணவாய் :—சத்திய மங்கலத்திலிருந்து மைசூர் ரஸ்தாவில் 8 மைல் போனதும் பனுரி என்ற ஊரை அடைகிறோம். அங்கிருந்து மேற்கில் 10-வது மைலில் இந்தக் கணவாய் ஆரம்பம். ஒரு காலத்தில் ஆங்கிலேயர் இந்தக் கணவாய் வழியாக மைசூருக்குள் நுழைய முயற்சித்தனர். அப்போது திப்பு சுல்தான் திடீரென்று படைகளுடன் வந்து தடுத்துவிட்டான்.

இதர முக்கிய ஊர்கள் :—நம்பியூர் (6,644), தாளவாடி (2,147), கொளப்பளூர் (4,132), தாடப்பள்ளி (3,883).

vi. கோள்ளேகாலம் தாலூக்கா

இத்தாலூக்கா ஜில்லாவின் வடக்கிலும், கொள்ளேகாலம் என்ற பட்டணம் தாலூக்காவின் வடக்குக் கோடியிலும் இருக்கின்றது.

கோள்ளேகாலம் (13,849) :—இது இத்தாலூக்காவின் முக்கியப் பட்டணம். இங்குப் பட்டு வஸ்திரங்கள் உருமால், பருத்தி வஸ்திரம் பேர் போனவை. காடுகளில் கிடைக்கும் சந்தனமரம் இங்கு வியாபாரத்திற்கு வருகிறது. திங்கட்கிழமை வாரச் சந்தை கூடும்.

சிவசமுத்திரம் :—கொள்ளேகாலத்திற்கு 9 மைல் வடகிழக்கேயுள்ள ஒரு தீவுப்பட்டணம். இங்குள்ள ரெங்கநாதஸ்வாமி கோயில் புராதனமானது. நீர்வீழ்ச்சி பார்வைக்கு நேர்த்தியாயிருக்கும்.

மாதேசுவரன் மலை :—கொள்ளேகாலத்திற்கு 40 மைல் தென்கிழக்கேயுள்ளது. இந்த மலையில் சந்தன மரம் அதிகம். இங்குள்ள சிவாலயம் புராதனமானது.

முடிகோண்டம் :—இதன் பழைய பெயர் முடிகொண்ட சோழபுரம். தெற்கில் 2-வது மைலில் மைசூர் எல்லையில் உள்ள வியாபார ஸ்தலம். விசேஷமாய் லிங்காயத்தார் வியாபாரம் செய்கின்றனர். பங்களூர் கம்பெனியார் பட்டு நூற்கும் யந்திர சாலைகள் ஏற்படுத்தியிருக்கின்றனர். சுற்றிய பட்டுப்பாய் காசி, பங்களூருக்கு அனுப்பப்படுகிறது. சுத்த ஜலமுள்ள குளம் ஒன்று ஊருக்கு வெளியில் இருக்கிறது. பஸ்திபுரத்திலும் யந்திரசாலைகள் உண்டு.

சிலுக்குவாடி :—மைசூர் எல்லையிலுள்ள ஊர். 8-வது மைலில் இருக்கிறது. இங்கு பட்டுப்புழு அதிகமாய் வளர்க்கப்படுகிறது. லிங்காயத்துப் பெரியோர் நிஜகுணர், சடாக்ஷரம் என்போர்கள் பிறந்த ஊர்.

காமக்கேரை :—கிழக்கில் 9-வது மைலில் இருக்கிறது. சர்க்கார் பட்டு வளர்க்கும் ஸ்டேஷனும் ஆஸ்பத்திரியும் இருக்கின்றன.

ஆலம்பாடி :—தாலூக்காவின் கிழக்குக் கோடியில் காவிரி நதிக் கரையில் இருக்கிறது. ஆலம்பாடி ஜாதி மாடுகள் பிரசித்தி பெற்றவை. காவிரி நதியில் அதிசயமான நீர் வீழ்ச்சியுள்ள பாறை இருக்கிறது. புகைப்பாறை (ஹொகினக்கல்) என்று பெயர். ஜலத்தின் சிறு அணுக்கள் புகைபோலத் தெரிகின்றன.

இதர முக்கிய ஊர்கள் :—பந்தஹள்ளி (2,685), ஹனூர் (2,400), மதுவனஹள்ளி (4,425).

vii. பாவானி தாலூக்கா

பவானி (6,896) :—இது ஈரோடு ரயில்வே ஸ்டேஷனுக்கு 9 மைல் வடக்கே உள்ளது. முன் காலத்தில் இலந்தை வனமாக இருந்ததால் தக்ஷிணப் பதரிகாச்சிரமம் என்றும் சொல்லப்படுகிறது. தேவாரத்தில் "திருநணு" என்று பெயர் கொண்டது. இந்த ஸ்தலத்தைத் தரிசித்தவருக்குத் திங்கு ஒன்றும் நண்ணாத இடம் என்று பொருள்படும். இதைச் சுற்றி 5 மலைகள் உண்டு.

இங்கு ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. இங்கு நெசவுத் தொழில் அதிகம் நடக்கிறது. இது ஜமுக்காளத்திற்குப் பேர் பெற்றது.

அந்தியூர் (9,009) :—இந்த ஊர் மாட்டுச் சந்தைக்குப் பேர் பெற்றது. பர்கூர் ஜாதிமாடு கிடைக்கும். திங்கட்கிழமை தோறும் சந்தை கூடும். இங்கு வெற்றிலை விசேஷமாய்ப் பயிராகிறது.

பர்கூர் (5,675):—இது பவானிக்குச் சுமார் 26 மைல் தூரத்திலுள்ளது. இது மாடுகளுக்குப் பேர் பெற்றது.

கவுந்தப்பாடி (9,027) :—வியாழக்கிழமை தோறும் சந்தை கூடும்.

இதர முக்கிய ஊர்கள் :—ஆப்பக்கூடல் (3,002) கெட்டி சமுத்திரம் (3,704), உலகடம் (8,709), ஜம்பை (7,765).

மேட்டூர் அணை கட்டியபின் 134 சதுர மைல் இத்தாலூக்காவின் பரப்பு வடகிழக்கு மூலையில் குறையலாயிற்று. சேலம் ஜில்லாவில் அது சேர்க்கப்பட்டிருக்கிறது.

viii. ஈரோடு தாலூக்கா

ஈரோடு (30,836) :—இது இத்தாலூக்காவின் முக்கியப் பட்டணம். இது காவேரி நதிக்குச் சமீபத்தில் உள்ளது. இது ஒரு முக்கியமான ரயில்வே ஜங்ஷன். இங்கு வியாபாரம் அதிகம்.

கொடுமுடி (5,302) :—இது காவேரி நதிக் கரையில் இருக்கிறது. இங்கு திங்கள் தோறும் சந்தை கூடும். தானியவியாபாரம் மிகுதி. ஈரோடுக்கு 21 மைல் தென்கிழக்கிலுள்ள ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கு ஒரு ஹைஸ்கூல் உண்டு. இவ்வூர் சிவன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது.

பெருந்துறை (5,616) :—ஈரோடிலிருந்து கோவை போகும் ரஸ்தாவில் 12-வது மைலில் உள்ள சிவஸ்தலம். காச நோய் பிடித்தவர்கள் இங்கு வாசம் செய்வதால் குணமடைகின்றனர். காச நோய் நிவாரணச் சாலை ஒன்று ஏற்பட்டிருக்கிறது. பொதுவாய் நமது ஜில்லாவில் ஆரோக்கிய வாசத்திற்கான இடங்களில் இது ஒன்று. கிராமச் சீர்திருத்தம் இங்கு மும்முரமாக நடைபெறுகிறது.

சென்னிமலை (3,585) :—பெருந்துறையிலிருந்து 8மைல் தெற்கேயுள்ள சுப்பிரமணிய ஸ்தலம். கோவில் மலைமீதிருக்கிறது. செங்குந்த முதலியார்களால் நெசவுத் தொழில் இங்கு அதிகமாய் நடைபெறுகிறது.

விஜயமங்கலம் :—பெருந்துறைக்கு 6 மைலில் கோவை ரஸ்தாவில்இருக்கிறது. சைவ வைஷ்ணவக் கோவில்களுடன் ஜைனர் விக்கிரகங்களும் காணப்படுகின்றன. இந்தப் பாகத்தில் இன்னும் ஜைனக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. வடக்கில் 6 மைல் தூரத்திலுள்ள திங்களூரிலும் ஹிந்தி ஜைன ஆலயங்கள் இருக்கின்றன.

கோளாநல்லி :—கொடி முடிக்குப் போகும் இருப்புப்பாதையில் இருக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்குள்ள மாரியம்மன் கோவில் திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும்.

ix. தாராபுரம் தாலூக்கா

தாராபுரம் (18,218) :—இது அமராவதி ஆற்றங்கரையில் இருக்கிறது. இது மாட்டுச் சந்தைக்குப் பேர் போனது. இங்கு நெய் வியாபாரம் அதிகம். சந்தை செவ்வாய் தோறும் கூடும். இது முன்பு விராடனுடைய ராஜதானியா யிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இவ்வூரில் கிறிஸ்தவர்கள் அதிகம். இவ்வூருக்குச் சமீபத்தில் உள்ள ரயில்வே ஸ்டேஷன் பழநி.

கோளிஞ்சிவாடி :—தாராபுரத்திலிருந்து கிழக்கில் அமராவதி நதியைக் கடந்ததும், இவ்வூரைச்சேருகிறோம். முனிஸிபல் டவுனில் ஒரு பாகம். இங்கு ஒரு பெரிய பிராமண அக்கிரகாரமும் சொக்க நாதர் ஆலயமும் இருக்கின்றன. 2 மைல் தூரத்தில் வீராஜி மங்கலம் என்ற கிராமம் இருக்கிறது. சிவன் பிள்ளை என்ற தமிழ் வித்வான் பிறந்த இடமாகும்.

காங்கயம் (8,746) :—தாராபுரத்திற்கு 21 மைல் வடக்கில் உள்ளது. இது காங்கய ஜாதி மாடுகளுக்கும் குதிரைகளுக்கும் பேர்போனது.

பழைய கோட்டை (2,733) :—கொங்கு வேளாளர்களுக்குத் தலைவர் பட்டக்காரர் இருக்கும் ஊர்.

சிவன் மலை (4,792) :—காங்காயத்திற்கு வடக்கே 3 மைல் தூரத்தில் உள்ளது. இங்கு 5 ஆலயங்கள் இருக்கின்றன

சங்கரண்டாம் பாளையம் (5,795) :—ஆற்றோரமாய்ச் சென்றால் 4 மைல் தூரத்தில் இவ்வூர் இருக்கிறது. இதன் பழைய பெயர் கொற்றை நகரம். இதில் பட்டக்காரர் ஒருவர் வசிக்கிறார். இவர் மூதாதையர் ஒரு பாண்டிய அரசனை வென்றதாகவும் காவிரிப்பூம் பட்டினத்தைக் கைப்பற்றியதாகவும் சொல்லப்படுகிறது. ஒரு பழைய சிவன் கோயில் இங்கு இருக்கிறது.

முத்தூர் (3,839):—காங்கயத்துக்குக் கிழக்கில் 12 மைல் தூரத்தில் நொய்யல் நதிக்குச் சமீபத்தில் இருக்கிறது. இங்கு ஒரு புராதன சிவன் கோயில் உண்டு.

படியூர் (1,534) :—காங்கயத்துக்கு வட மேற்கில் 7 மைல் தூரத்தில் பல்லடம் தலூக்கா எல்லைக்குச் சமீபத்தில் இருக்கிறது. இங்கு சில வருஷங்களுக்கு முன் கோமேதகமும் ரோம் தேசத்து நாணயங்களும் கிடைத்தன.

x. பல்லடம் தாலூக்கா

இத்தாலூக்கா ஆறு தாலூக்காக்களால் சூழப்பட்டிருக்கிறது. நொய்யல் நதி வடக்குப் பாகத்தில் சென்றாலும் அதனால் விசேஷப் பலன் இல்லை. மழையும் இத்தாலூக்காவில் குறைவு. ரஸ்தாக்களில் மரங்கள் அதிகமாகக் காணமுடியாது. பூமி வறண்டிருக்கிறது.

பல்லடம்(6,987):—தாலூக்காவின் முக்கிய பட்டணமா யிருந்தாலும் தாலூக்காக் கச்சேரி இங்கில்லை. 10 மைலிலுள்ள திருப்பூருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. பல்லடத்தைச் சுற்றியுள்ள நிலத்தில் பருத்தி அதிகமாய்ப் பயிராகிறது. இந்த ஊரிலிருந்து ஏழு ரஸ்தாக்கள் வெளிச்செல்லு

கின்றன. U. M. S. மோட்டார் கம்பெனியின் பிரதம ஆபீஸ் இங்கு இருக்கிறது.

திருப்பூர் (18,048):—இதுவும் ஏழு ரஸ்தாக்கள் பெற்ற பட்டணமாகும். நொய்யல் நதிக்கரையில் இருக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். பருத்தி விளையும் பாகத்தில் இருப்பதால் பருத்தி வேலை செய்யும் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. மற்ற இடங்களுக்குப் பருத்தி ரயில் மூலம் ஏற்றுமதி ஆகின்றது. ஒரு பெரிய சிவன் கோவில் உண்டு. வைகாசி ரத உற்சவத்தின் போது கால்நடைச் சந்தை நடைபெறும். இந் நகரில் ஹைஹ ஸ்கூல் ஒன்று உண்டு.

இருகூர் (6,393):—பல்லடத்துக்கு 17-மைல் தூரத்தில் கோயமுத்தூர் தாலூக்கா எல்லையில் இருக்கிறது. இங்கு ஜமுக்காளமும் துப்பட்டியும் நெய்கிறார்கள்.

செஞ்சேரி:—இதன் பழையபெயர் தென்சேரி. பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை எல்லைகளுக்குச்சற்று தூரத்தில் உள்ளது. அழகான கோவில் ஒன்று மலையின்மேல் இருக்கிறது. மலை சிறியது. மலையில் பல குகைகள் இருக்கின்றன. மலை ஓரத்தில் உள்ள மலை அடிவாரத்தில் மடங்கள் பல வுண்டு.

சூலூர் (7,221):—இது ஒரு ரயில்வேஸ்டேஷன். வெற்றிலைக்குப் பேர் போனது.

அப்பியாசங்கள்

1. ஒவ்வொரு தாலூக்காவிலும் உள்ள முக்கியபட்டணங்களைப் பற்றிக் கூறுக.

2. நமது ஜில்லாவிலுள்ள முக்கிய ஸ்தலங்கள் யாவை.

3. நமது ஜில்லாவில் சந்தை கூடும் இடங்கள் யாவை?

4. நமது ஜில்லா மற்ற ஜில்லாக்களைவிட எப்படி பிரசித்தி பெற்று விளங்குகிறது?

சீதோஷ்ணஸ்திதி : விளைபொருள் : மனித வாழ்க்கை

பூமி உருண்டையாக இருப்பதால் சூரியனின் கிரணங்கள் சில விடங்களில் செங்குத்தாகவும் சில விடங்களில் சாய்ந்தும் விழுகின்றன. கிரணங்கள் செங்குத்தாய் விழும் இடங்களில் அதிகமான உஷ்ணமும், சாய்வாய் விழும் இடங்களில் உஷ்ணம் குறைவாகவும் ஏற்படுகிறது. சீதோஷ்ண சம்பந்தமாக உலகத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன :—

வட துருவம்



தென்துருவம்

(1) உஷ்ண மண்டலம்.

(2) சம சீதோஷ்ண மண்டலம் அல்லது மித மண்டலம்.

(3) குளிர் மண்டலம்.

சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு பயிர் பச்சைகளும் விளைபொருள்களும் ஏற்படுகின்றன. சீதோஷ்ணஸ்திதி, விளைபொருள்கள் இவைகளுக்குத் தகுந்தாற்போல் மனிதனுடைய வாழ்க்கையும் வேறுபடுகிறது. இந்த உலகத்திலுள்ள முக்கியமான சீதோஷ்ண மண்டலங்களையும் அவ்விடத்தில் விளையும் பொருள்கள், மனிதவாழ்க்கை இவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுவோம்.

(1) உஷ்ணமண்டலம் :— இம் மண்டலம் பூமியின் நடுவிலுள்ள மத்தியரேகைக்குத் தெற்கிலும் வடக்கிலும் சுமார் 1,500 மைல் வரையில் பரவியுள்ளது. இந்த சூரிய கிரணங்கள் அநேகமாய்செங்குத்தாய் விழுவதால் அதிகமான உஷ்ணம் ஏற்படுகிறது. மேலும் இங்கு ஆகாயத்தில் மேகங்கள் சஞ்சரிப்பதால் அதிகமான மழையும் உண்டாகிறது.

விளைபொருள்கள்:—இம் மண்டலத்தில் சூரிய உஷ்ணமும் மழையும் அதிகம் ஏற்படுவதால் அதிகநெருக்கமான காடுகள் ஏற்பட்டுள்ளன. ஆறுகள் உள்ள இடங்களிலும், மழையுள்ள இடங்களிலும் நெல், கரும்பு, புகையிலை, சணல் முதலியவைகளும் சற்று வறண்ட பிரதேசத்தில் பருத்தி, வரகு, சோளம், கம்பு முதலிய தானியங்களும் விசேஷம்.

மனிதவாழ்க்கை :—ஆகவே காடுகள் அதிகமில்லாதவிடங்களில் விவசாயம் முக்கியமான தொழில். புல்வெளிகளில் ஆடு மாடுகள் வளர்க்கப்படுகின்றன. ஆகவே இம்மண்டலத்தில் ஜன நெருக்கம் வெகு அதிகம். நாம் வசிக்கும் இந்தியா இம்மண்டலத்தைச் சேர்ந்தது.

(2) சம சீதோஷ்ணமண்டலம் :— உஷ்ண மண்டலத்துக்குத் தெற்கிலும் வடக்கிலுமாக இரண்டு சம சீதோஷ்ண மண்டலங்கள் உண்டு. இங்கு சூரிய கிரணங்கள் அதிக செங்குத்தாயும், அதிக சாய்வுமில்லாமல் சிறிது சாய்ந்து விழுவதால் மிதமான உஷ்ணம் ஏற்படுகிறது.

விளைபொருள் :— உஷ்ண மண்டலத்தை அடுத்துள்ள இந்த மண்டலத்தின் பாகங்கள் சற்று உஷ்ணமாகவே இருக்கின்றன. அங்கு கோதுமை, பார்லி, ஓட்ஸ் ஆகிய மித

மண்டலப் பயிர்கள் வளர்கின்றன. விசாலமான புல் வெளிகளில் அடர்ந்த ரோமத்தோடு கூடிய ஆடு கள் வளருகின்றன.

மனித வாழ்க்கை :—பூமி சற்று சாரமும் சிறிது உஷ்ணமுமான இடங்களில் விவசாயம் நடக்கிறது. புல்வெளிகளில் ஆடு மாடுகள் வளர்த்தலே முக்கியத் தொழில். அதற்கும் அப்பால் சற்று குளிர்ந்த பாகத்தில் விவசாயம் முக்கியத் தொழில் அல்ல. மேலும் அங்கு நிலக்கரி அகப்படுவதால் பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தி அதில் பருத்தி, கம்பளி நெய்தல், யந்திரங்கள் செய்தல் முதலிய தொழில்கள் நடத்தி வருகிறார்கள். உதாரணம் இங்கிலாந்து, ஜர்மனி, ஜப்பான்.

(3) குளிர் மண்டலம் :—பூமியின் வடகோடிக்கு வட துருவம் என்றும் தென்கோடிக்குத் தென் துருவம் என்றும் பெயர். இத்துருவங்களைச்சுற்றியுள்ள பாகங்களில் சூரிய கிரணங்கள் மிகவும் சாய்ந்து விழுகின்றன. ஆகவே இங்கு அதிக உஷ்ணம் ஏற்படுவதில்லை. எனவே இங்குள்ள சில விடங்கள் எப்பொழுதும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். சில விடங்களில் கோடை காலத்தில் மட்டும் பனிக்கட்டி உருகும்.

விளை பொருள்கள் : மனித வாழ்க்கை :—இம் மண்டலத்தில் மித மண்டலத்தை அடுத்த பாகங்களில் தேவதாரு போன்ற லேசான மரங்கள் வளருகின்றன. மற்ற விடங்கள் பனிக்கட்டியால் மூடப்பட்டிருப்பதால் ஒருவிதமான பயிரும் விளையாது. ஆகவே இங்கு விவசாயம் என்ற தொழிலே கிடையாது. மரம் வெட்டுவதும், வெண்கரடி, ஸீல் முதலிய மிருகங்களை வேட்டையாடுவதுமே முக்கியத் தொழில்.

இவ்விதமாக உலகத்திலுள்ள வெவ்வேறு இடங்களிலும் வெவ்வேறு விதமான இயற்கை யமைப்பு, சீதோஷ்ண ஸ்திதிக்கேற்ப விளை பொருள்களும் மனித வாழ்க்கையும் ஏற்படுகின்றன.

இதுவரையில் நாம் நமது ஜில்லாவின் பூகோள விஷயங்களைத் தெரிந்து கொண்டதுபோலவே இப்பூமியின் பல பிரதேசங்களைப் பற்றியும் விவரமாக மேல்வகுப்புக்களில் தெரிந்து கொள்ளுவோம்.

நமது நாடு செழிக்கவும், உலகம் வாழவும் கடவுளைத் துதித்து நாமும் நம்மால் கூடுமானவரையில் முயற்சிப்போமாக!

கேள்விகள்

1. சீதோஷ்ண சம்பந்தமாய் உலகத்தை எத்தனை மண்டலங்களாகப் பிரிக்கலாம் ?

2. உஷ்ணமண்டலத்தின் விளை பொருள்கள் யாவை ? தொழில்கள் என்ன ?

3. மிதமண்டலத்தில் நடக்கும் முக்கியத் தொழில்கள் யாவை ?

4. குளிர் மண்டலத்தில் வேட்டையாடுதலும், மரம்வெட்டுதலுமே முக்கியத் தொழில்கள் ஏன் ?

5. ஏன் குளிர் மண்டலத்தில், விவசாயம் சிறிது கூட நடப்பதில்லை ?